காதியானும் அதன் புனித, வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களும் (தொடர்-5) பக்கம் 3

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு (தொடர்-19) பக்கம் 8

மார்க்க அறிவுப் புத்தகம் (தொடர்-9) பக்கம் 16

யார் நல்ல மனிதர்? (தொடர்-2) பக்கம் 18



மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | July 2023 | Vol. 2 - Issue No. 8



Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 96297 46340




لَوْ اَنْزَلْنَا هٰذَا الْقُرْاٰنَ عَلٰی جَبَلٍ لَّرَاَيْتَهٗ خَاشِعًا مُّتَصَدِّعًا مِّنْ خَشْيَةِ اللّٰهِ ؕ
وَتِلْكَ الْاَمْثَالُ نَضْرِبُهَا لِلنَّاسِ لَعَلَّهُمْ يَتَفَكَّرُوْنَ

**இந்தக் குர்ஆனை ஏதாவதொரு மலையின் மீது நாம் இறக்கி இருந்தால் நிச்சயமாக நீர் அதனைப் பணிவுள்ளதாகவும், அல்லாஹ்வின் பயத்தால் பல்வேறு துண்டுகளாகத் தகர்ந்து விடக் கூடியதாகவும் கண்டிருப்பீர். இவை, மக்கள் சிந்தனை செய்யும் பொருட்டு அவர்களுக்காக நாம் விளக்கும் உவமைகளாகும்.**

***(அல் ஹஷ்ர் வசனம் 22)***



# திருக்குர்ஆன்

اَللّٰهُ نَزَّلَ اَحۡسَنَ الۡحَدِيۡثِ كِتٰبًا مُّتَشَابِهًا مَّثَانِىَ ۖ
تَقۡشَعِرُّ مِنۡهُ جُلُوۡدُ الَّذِيۡنَ يَخۡشَوۡنَ رَبَّهُمۡ ۚ
ثُمَّ تَلِيۡنُ جُلُوۡدُهُمۡ وَقُلُوۡبُهُمۡ اِلٰى ذِكۡرِ اللّٰهِ ؕ
ذٰلِكَ هُدَى اللّٰهِ يَهۡدِىۡ بِهٖ مَنۡ يَّشَآءُ ؕ
وَمَنۡ يُّضۡلِلِ اللّٰهُ فَمَا لَهٗ مِنۡ هَادٍ

அல்லாஹ் மிகச் சிறந்த செய்தியினை அதாவது முதஷாபிஹான (முன்னுள்ள மற்ற வேதங்களின் சிறந்த கருத்துக்களுக்கு உடன்பாடான) மிக உயர்ந்த கருத்துக்களைக் கொண்ட வேதத்தை இறக்கினான். அதனைப் படிப்பதனால் தங்கள் இறைவனுக்கு அஞ்சுபவர்கள் மெய்சிலிர்த்து விடுகின்றனர். பின்னர் அவர்களின் தோல்களும் உள்ளங்களும் மென்மை அடைந்து அல்லாஹ்வை நினைவு கூருவதன் பக்கம் சாய்ந்து விடுகின்றன. இது அல்லாஹ்வின் வழிகாட்டுதல் ஆகும். அவன் விரும்புபவர்களுக்கு இதன் மூலம் நேர்வழியினைக் காட்டுகின்றான். அல்லாஹ்வால் வழிகேட்டில் செல்ல விடப்பட்டவனுக்கு வழிகாட்டுபவன் எவனுமில்லை. (39:24)



# ஹதீஸ்

قالَ رَسُولُ اللّهِ (صَلَّى اللّهُ عَلَيْهِ وَ آلِهِ وَسَلَّمَ):
إِنَّ هذَا الْقُرآنَ هُوَ حَبْلُ اللّهِ وَ هُوَ النُّورُ الْمُبِينُ
وَ الشِّفاءُ النّافِعُ فَاقْرَؤُوهُ فَإِنَّ اللّهَ عَزَّوَجَلَّ يُؤْجِرُكُمْ
عَلى تِلاوَتِهِ لِكُلِّ حَرْفٍ عَشْرَ حَسَناتٍ.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நிச்சயமாக இந்தக் குர்ஆன் அல்லாஹ்வின் கயிறும், பிரகாசமான ஒளியும், பயனுள்ள சிகிச்சையும் ஆகும். எனவே, இதனை ஓதிக் கொண்டிருங்கள். ஏனெனில், ஓதப்படுகின்ற ஒவ்வோர் எழுத்திற்கும் பத்து நற்செயல்களுக்கான கூலியை மிக்க மேலான புகழுக்குரிய அல்லாஹ் வழங்குகின்றான்.

(பிஹாருல் அன்வார் தொகுதி 92 பக்கம் 19)

# காதியானும் அதன் புனித, வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களும்

தொகுப்பு: மவ்லானா முஹம்மது ஹமீது கவ்ஸர்
(அஹ்மதிய்யத் வரலாற்றுத் துறையின் பொறுப்பாளர், காதியான்)

5

தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A.

## அக்ஸா மஸ்ஜிது



சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தந்தை மர்ஹூம் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிப் அவர்கள் மஸ்ஜிது கட்டும் நோக்கத்தில் இரண்டு கடைவீதிகளுக்கும் இடையில் ஓர் உயரமான, சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ற இடத்தை 700 ரூபாய்க்கு வாங்கினார்கள்.

(சீரத்துல் மஹ்தி தொகுதி 1 பக்கம் 215 ரிவாயத் எண்: 232 காதியான் பதிப்பு 2008)

மேலும் 1875-ஆம் ஆண்டில் ஒரு மஸ்ஜிதுக்கான அடிக்கல் நாட்டினார்கள். அது 'அக்ஸா மஸ்ஜிது' என்று அழைக்கப்படுகிறது. இந்தப் பள்ளிவாயிலின் கட்டுமானப் பணி 1876-ஆம் ஆண்டு மே மாதம் முழுமையடைந்தது. இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வயது ஏறக்குறைய 40 ஆண்டுகளாக இருந்த அந்தக் காலத்தில் நடந்த விஷயமாகும். அப்போது அவர்கள் எந்தவொரு வாதமும் செய்திருக்கவில்லை; ஜமாஅத்தும் இருந்ததில்லை. காதியானில் ஏற்கெனவே அதிகமான மஸ்ஜிதுகள் இருக்கும் நிலையில் இந்த மஸ்ஜிதைப் பார்த்து, இவ்வளவு பெரிய மஸ்ஜிதுக்கு என்ன தேவை இருக்கிறது? யார் தொழுவது என்று ஒருவர் கேட்டார். இந்த மஸ்ஜிதில் வௌவால்கள்தான் வாழ்ந்து வரும் என்று அவர் கூறினார். (ஹயாத்துந் நபி தொகுதி 1 பக்கம் 42 காண்க). ஆனால் அல்லாஹ்வின் மலக்குகள் அந்த நேரத்தில் சிரித்திருப்பார்கள். மேலும், பெரியதாகத் தென்படும் இந்த மஸ்ஜிது அதிகமான மக்களின் கூட்ட நெரிசலின் காரணமாக எப்போதும் சிறியதாகவே ஆகிக் கொண்டு செல்லும் என்று கூறியிருப்பார்கள்.

இந்த மஸ்ஜிதின் துவக்க காலத்தின் பழைய கட்டடம், அதன் முற்றம், கிணற்றின் அடையாளம் ஆகியவை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் இருந்தது போன்று அப்படியே தத்தமது இடத்தில் இருக்கின்றன. 1876-ஆம் ஆண்டு மே மாதம் 2-ஆம் நாள் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிப் அவர்கள் மரணமடைந்தார்கள். அவர்களின் வஸிய்யத்தின்படி, (உயிலின்படி) அவர்கள் இதே மஸ்ஜிதின் ஒரு மூலையில் அடக்கம் செய்யப்பட்டார்கள். اَللّٰهُمَّ ارْحَمْهُ وَاَدْخِلْهُ الْجَنَّةَ அல்லாஹும்ம மர்ஹம்ஹு வஅத்கில் ஹுல் ஜன்னத - அல்லாஹ்வே இவர்கள் மீது கருணை காட்டுவாயாக. இவர்களை சுவர்க்கத்தில் நுழைப்பாயாக).

(தாரீக்கே அஹ்மதிய்யத் தொகுதி 1 பக்கம் 127-128 காதியான் பதிப்பு 2007)

மஸ்ஜிதின் துவக்கக் கட்டடம் ஏறக்குறைய 200 பேர் தொழுகையை நிறைவேற்றும் அளவுக்கு இருந்தது. பின்னர் அஹ்மதிய்யா ஜமாஅத் நிலைநாட்டப்பட்டபோது மக்கள் அதிகமாக காதியான் வரத் துவங்கினார்கள். மேலும் இந்த மஸ்ஜிதில் தொழுகையாளிகளுக்கு இடம் இருக்கவில்லை. எனவே 1900-ஆம் ஆண்டு மஸ்ஜின் திறந்த வெளிப் பகுதியை கிழக்கு திசையில் எந்த அளவுக்கு விரிவுபடுத்த வேண்டிய தேவை உணரப்பட்ட -தென்றால், அந்த விரிவாக்கத்தினால் ஹுஸூர் (அலை) அவர்களின் தந்தையின் கபர் மஸ்ஜிதின் முற்றத்திற்குள் வந்து விட்டது. அசல் கபர் மஸ்ஜிதின் தற்போதுள்ள முற்றத்திலிருந்து 6, 7 அடி கீழே இருக்கிறது. எனவே மக்கள் கபருக்கு மேலிருந்து கடந்து செல்லாதிருக்கும் வகையிலும், கபருக்கு கண்ணியமில்லாமல் போய் விடக் கூடாது என்பதற்காகவும் கபர் இருக்கும் இடத்தின் மேற்பகுதியில் நான்கு சுவர் எழுப்பி அது மேலேயிருந்து அடைக்கப்பட்டுள்ளது.

1900-ஆம் ஆண்டு அக்ஸா மஸ்ஜிதின் முற்றம் விரிவாக்கம் செய்தபோது அதில் வெள்ளை நட்சத்திரம் கொண்ட செங்கல் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த அடையாளம் இப்போதுவரை இருக்கிறது. இந்த விரிவாக்கத்திற்குப் பின்னர் மஸ்ஜிதில் 2000 பேர் தொழுவதற்கு இடம் கிடைத்து விட்டது. அக்ஸா மஸ்ஜிதின் கட்டடத்தில் இரண்டாம் முறையாக விரிவாக்கம் ஹஸ்ரத் முதல் கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் காலத்தில் 1910-ஆம் ஆண்டில் செய்யப் -பட்டது. மூன்றாவது விரிவாக்கம் 1938-ஆம் ஆண்டு ஹஸ்ரத் இரண்டாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் காலத்தில் நடந்தது. 1938-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ஆம் நாள் இந்த மஸ்ஜிதில் சய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஜுமுஆ பேருரையாற்றுவதற்கு முதன் முறையாக ஒலிபெருக்கியைப் பயன்படுத்தினார்கள். (தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 7 பக்கம் 539 காதியான் பதிப்பு 2007, அல்∴பஸ்ல் பத்திரிகை 13, ஜனவரி 1938 பக்கம் 1 முதல் 4 வரை)



## அக்ஸா மஸ்ஜிதின் சிறப்புகள்

1. அக்ஸா மஸ்ஜிதுக்குப் பல சிறப்புகள் இருக் -கின்றன. அவற்றில் ஒன்று, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதில் தொழுகைகளை நிறைவேற்றிக் கொண்டிருந்தார்கள். குறிப்பாக, முபாரக் மஸ்ஜிது கட்டப்படுவதற்கு முன்பு அவர்கள் இந்த மஸ்ஜிதிலேயே தொழுகையை நிறைவேற்றி வந்தார்கள். இறைவனை ஸிக்ர் செய்து வந்தார்கள். மேலும் இந்த மஸ்ஜிதின் பழைய பகுதியின் நடுவிலுள்ள (இமாம் தொழ வைக்கின்ற) மிஹ்ராப் இடத்தில் ஹுஸூர் (அலை) அவர்கள் 1900-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11-ஆம் நாள் ஈதுல் அழ்ஹாவின்போது அரபி மொழியில் (எந்தவொரு முன் ஆயத்தமும் இல்லாமல்) உடனடியாக அரபி மொழியில் பெருநாள் குத்பா கொடுத்தார்கள். அது 'குத்பா இல்ஹாமிய்யா' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

2. அக்ஸா மஸ்ஜிதில்தான் ஹஸ்ரத் வாக்களிக்கப் -பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய காலத்தில் முதல் ஜல்ஸா சாலானா (ஆண்டு மாநாடு) 1891-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27-ஆம் நாள் நடைபெற்றது. அதில் 75 சகோதரர்கள் கலந்து கொண்டனர். ஹுஸூர் (அலை) அவர்களின் காலத்தில் (குளத்தின் ஓரத்தில் நடந்த) 1892-ஆம் ஆண்டின் ஜல்ஸா சாலானாவைத் தவிர மற்ற ஜல்ஸாக்கள் அக்ஸா மஸ்ஜிதிலேயே நடைபெற்று வந்தன. மேலும் ஹஸ்ரத் முதல் கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் அருளுக்குரிய காலத்திலும் துவக்கத்திலுள்ள ஐந்து ஜல்ஸாக்கள் அக்ஸா மஸ்ஜிதிலேயே நடைபெற்றன.

3. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்தப் பள்ளிவாயிலின் விரிவாக்கம் என்பதற்கு இஸ்லாத்தின் கம்பீரம் என விளக்கம் கொடுத்தவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

"இறைவனின் அருளாலும், கருணையாலும் என் தந்தை சிறிய அளவில் இரண்டு கடைவீதிகளுக்கு இடையில் ஓர் உயரமான நிலத்தில் உருவாக்கிய காதியானிலுள்ள மஸ்ஜிது இப்போது இஸ்லாத்தின் கம்பீரத்திற்காக மிகவும் விரிவாக ஆக்கப்பட்டது." (குத்பா இல்ஹாமிய்யா. ரூஹானீ கஸாயின் தொகுதி 16 பக்கம் 15 ரப்வா பதிப்பு ஆண்டு 2008)

சீரத்துல் மஹ்தி தொகுதி 5-ல் எழுதப்பட்டுள்ள -தாவது, ஒருமுறை ஹுஸூர் (அலை) அவர்கள் இந்துக்களின் கடைவீதியைக் கடந்து சென்றவாறு, இரவு நேரத்தைக் கழித்தார்கள்....... பின்னர் பெரிய மஸ்ஜிதுக்கு வந்து தம் தந்தையாரின் கபருக்கு முன் துஆ செய்தார்கள். மேலும் நாங்கள் அனைவரும் துஆ செய்தோம். பிறகு, 'தண்ணீர் கொண்டு வாருங்கள். இந்தக் கிணற்றின் தண்ணீர் மிகவும் குளிர்ச்சியாக இருக்கிறது' என்று கூறினார்கள். தண்ணீர் கொண்டு வரப்பட்டு முதலில் ஹுஸூர் (அலை) அவர்கள் குடித்தார்கள். பிறகு நாங்கள் குடித்தோம். (சீரத்துல் மஹ்தி தொகுதி 2 பக்கம் 229 ரிவாயத் எண்: 1386 ரப்வா பதிப்பு 2008-ஆம் ஆண்டு)

ஹஸ்ரத் இரண்டாவது கலீ∴பத்துல் மஸீஹ் அல் முஸ்லிஹுல் மவ்வூது (ரலி) அவர்கள் 5, பிப்ரவரி 1932-ஆம் தேதிய ஜுமுஆ உரையில் இவ்வாறு கூறினார்கள்:

"இறைவன் இந்த மஸ்ஜிதுக்கு அக்ஸா மஸ்ஜிது எனப் பெயரிட்டுள்ளான். மேலும் இதைப் பற்றி مُبَارِكٌ وَّمُبَارَكٌ وَّكُلُّ اَمْرٍ مُّبَارَكٍ يُّجْعَلُ فِيْهِ (முபாரிகுன்வ் வமுபாரகுன்வ் வகுல்லு அம்ரின் முபாரகின்ய் யுஜ்அலு ∴பீஹி - பொருள்: அருளை வழங்கக் கூடியதாகும் அருள் வழங்கப்பெற்றதாகும். ஒவ்வொரு விஷயமும் இதில் அருளுக்குரியதாக ஆக்கப்படும்) என்று அவன் கூறியிருக்கிறான். அதாவது எந்த வேலை இதில் செய்யப்படுமோ அது அருளுக்குரியதாக இருக்கும். இந்த மஸ்ஜிதின் தொழுகை அவருக்கு அதிக நற்கூலிக்குக்

காரணமாக இருக்கும்.'' (அல் ஃபஸ்ல் பத்திரிகை, காதியான் தாருல் அமான் 14, பிப்ரவரி 1932 பக்கம் 7 எண்: 97 தொகுதி 19 பத்தி எண் 2)


சய்யிதுனா ஹஸ்ரத் அல்முஸ்லிஹுல் மவ்வூது (ரலி) அவர்களின் மேற்குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டலில் இருந்து, مُبَارِكٌ وَّمُبَارَكٌ وَّكُلُّ اَمْرٍ مُّبَارَكٍ يُّجْعَلُ فِيْهِ (முபாரிகுன்வ் வமுபாரகுன்வ் வகுல்லு அம்ரின் முபாரகின்ய் யுஜ்அலு ஃபீஹி - பொருள்: அருளை வழங்கக் கூடியதாகும் அருள் வழங்கப்பெற்றதாகும். ஒவ்வொரு விஷயமும் இதில் அருளுக்குரியதாக ஆக்கப்படும் என்ற) இந்த இல்ஹாம் அக்ஸா மஸ்ஜிது தொடர்பாகவும் இருக்கிறது என்பது தெரிய வருகிறது.

அவ்வாறே ஹஸ்ரத் அல்முஸ்லிஹுல் மவ்வூது (ரலி) அவர்கள் பரிசுத்தமான பூமிக்கு வருகின்றவர்கள் ஷஆயிருல்லாஹ்வை (அல்லாஹ் -வின் அடையாளங்களை)க் காண வருமாறு அறிவுரை கூறியவாறு இவ்வாறு கூறினார்கள்:

''ஷஆயிருல்லாஹ் (அல்லாஹ்வின் அடையாளங்கள்) என்பதில் முபாரக் மஸ்ஜிது, அக்ஸா மஸ்ஜிது, மினாரத்துல் மஸீஹ் ஆகியவை அடங்கும். இந்த இடங்களைச் சுற்றிப் பார்ப்பதற்காக என்று அல்லாமல் அவற்றை ஷஆயிருல்லாஹ் (அல்லாஹ்வின் அடையாளங்கள்) எனக் கருதி சுற்றிப் பார்க்க வேண்டும். இறைவன் அவற்றின் அருள்களிலிருந்து பயனடையச் செய்வதற்காக அவ்வாறு செய்ய வேண்டும். நீங்கள் மினாரத்துல் மஸீஹின் பக்கம் செல்லும்போது இது மினாரா ஆகும் என்று கருதி செல்லாதீர்கள். மாறாக, இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறங்கிய அந்த இடமாகும் எனக் கருதுங்கள். அவ்வாறே நீங்கள் அக்ஸா மஸ்ஜிதுக்கு செல்லும்போது அது செங்கற்களும், சுண்ணாம்பும் கொண்ட ஒரு கட்டடமாகும் எனக் கருதாதீர்கள். மாறாக, இங்கிருந்து இறைவனின் ஒளி உலகிற்குப் பரவிய இடமாகும் எனக் கருதுங்கள். பிறகு நீங்கள் முபாரக் மஸ்ஜிதிற்கு செல்லும்போது இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொழுகைகளைத் தொழுது வந்த புனித இடமாகும் எனக் கருதுங்கள்.'' (அல்ஃபஸ்ல் நாளிதழ் காதியான் தாருல் அமான் 1, அக்டோபர் 1936 தொகுதி 24 இதழ் 79 பக்கம் 6)

## 2008-ஆம் ஆண்டு கிலாஃபத் நூற்றாண்டு விழாவில் அக்ஸா மஸ்ஜிதின் விரிவாக்கம்

இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்கு கொஞ்ச காலத்திற்குப் பிறகே அக்ஸா மஸ்ஜிதை விரிவுபடுத்த வேண்டும் என்ற உணர்வு தோன்றத் துவங்கி இருந்தது. இறுதியில் இந்த மகத்தான விரிவாக்கம் ஏதாவது வரலாற்று நிகழ்வின்போது ஏற்பட வேண்டும் என்பதே இறை நியதியாக இருந்தது. ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களின் அருளுக்குரிய காலத்தில் கிலாஃபத்தின் நூற்றாண்டு நிகழ்வின்போது 7, ஜூன் 2008 அன்று இந்த இடத்தில் மூன்று மாடி கட்டடத்திற்கான அடிக்கல்லை இந்தியா டெஸ்க் இன்சார்ஜ் (இந்தியா, நேபாளம், பூட்டான் ஆகியவற்றின் தற்போதைய வகீல் தஃமீலோ தன்ஃபீஸ்) மதிப்பிற்குரிய ஃபாதிஹ் சாஹிப் அவர்கள் நாட்டினார்கள். (பத்ர் 21, ஆகஸ்டு 2008)




ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய காலத்தில் இங்கு முஸ்லிம் அல்லாத ஒருவர் மிக உயரமான கட்டடத்தை கட்டத் துவங்கியபோது ஜமாஅத் சகோதரர்கள் மஸ்ஜிது மற்றும் தாருல் மஸீஹ் ஆகியவை அருகில் இருப்பதன் காரணமாக தமது கவலையையும், வருத்தத்தையும் தெரிவித்தனர். அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவனிடமிருந்து ஞானத்தைப் பெற்று இவ்வாறு கூறினார்கள்:

"இது ஒன்றும் கவலைக்குரிய விஷயம் அல்ல. மன்னரின் கூடாரத்திற்கு அருகில் எவரும் நிற்க முடியாது." (அல்ஃபஸ்ல் 3, மே 1932 பக்கம் 5)

கட்டத் துவங்கிய பிறகே வீட்டு எஜமானருக்குத் தொடர்ந்து துன்பங்கள் வந்து கொண்டிருந்தன. அவர் கட்டடத்தைத் தீய சகுனமாகக் கருதி அதை சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவுக்கு விற்று விட்டார். 1932-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5-ஆம் நாள் அதில் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் அலுவலகங்கள் மாற்றப்பட்டு விட்டன. (அல்ஃபஸ்ல் 28, ஏப்ரல் 1932 பக்கம் 2) ஒரு பக்கம் 2008-ல் இந்தக் கட்டடம் மிகவும் மோசமான நிலைக்குள்ளாகி விட்டது. மறுபக்கம் அக்ஸா மஸ்ஜிது விரிவு செய்ய வேண்டிய அவசியமும் இருந்தது. எனவே அதை தகர்த்து விட்டு மஸ்ஜிது விரிவாக்கம் செய்யப்பட்டது. மேலும் 'மன்னரின் கூடாரத்திற்கு அருகில் எவரும் நிற்க

முடியாது’ என்ற ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முன்னறிவிப்பு மீண்டும் ஒருமுறை மிகவும் மகத்தான முறையில் நிறைவேறியது. اَلْحَمْدُ لِلّٰهِ عَلٰى ذٰلِكَ (அல்ஹம்து லில்லாஹி அலா ஸாலிக் - அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்).

விரிவாக்கம் செய்த பிறகு இப்போது இந்த மஸ்ஜிதில் ஆயிரக்கணக்கான மனிதர்கள் தொழு-வதற்கான இடம் இருக்கிறது. நிலப்பரப்பில் இருக்கும் ஹாலின் நீளம் வடக்கிலிருந்து தெற்கு வரை 118 அடியும், கிழக்கிலிருந்து மேற்கு வரை அகலம் 55 அடியும் ஆகும். அது மட்டுமின்றி, நிலப்பரப்பிலேயே மஸ்ஜிதின் பழைய பகுதியில் தெற்கு திசையில் இருக்கும் ஹாலின் நீளம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி 72 அடியும், அகலம் 40 அடியும் ஆகும்.

மஸ்ஜிதின் ஒவ்வொரு தரையின் பரப்பளவும் 7200 சதுர அடியாகும். மஸ்ஜிதின் பழைய பகுதிக்குச் செல்வதற்கு வடகிழக்குப் பகுதியில் ஏணிப்படிகள் உருவாக்கப்பட்டிருக்கும் நிலையில், அதன் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பகுதிக்கு செல்வதற்காக தெற்குப் புறத்தில் ஏணிப்படிகள் கட்டப்பட்டுள்ளன.



அக்ஸா மஸ்ஜிதின் மேல்தளத்தில் தெற்குப் புறத்தில் குவிமாடமும் நான்கு சிறிய மினாராக்களும்

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் முர்தஸா அவர்கள் 1875-1876 ஆண்டில் கட்டிய அக்ஸா மஸ்ஜிதின் கூரையிடப்பட்ட அந்தப் பகுதி நீங்கலாக எஞ்சிய கூரையிடப்பட்ட அந்தப் பகுதியின் மேற்கூரை காலப்போக்கின் காரணமாக மாற்றம் செய்ய வேண்டிய நிலையில் இருந்தது. ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஒப்புதலுக்கும், வழிகாட்டலுக்கும் ஏற்ப 2015-ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் பழைய மேற்கூரையை இடித்து விட்டு புதிய மேற்கூரை (Linter) கட்டப்பட்டது. மேலும் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிப் 1875-ஆம் ஆண்டில் கட்டிய பழைய பகுதியின் மேற்கூரையில் கட்டியிருந்தவாறே மேற்கூரையின் தெற்குப் பகுதியில் அதே மாதிரியான குவிமாடமும், நான்கு மூலைகளிலும் நான்கு சிறிய மினாராக்களும் கட்டப்பட்டன.

குவிமாடத்தின் உயரம் ஏறக்குறைய 19 அடி 6 அங்குலம் ஆகும். மேலும் ஒவ்வொரு மூலையில் உள்ள மினாராவின் உயரம் ஏறக்குறைய 13 அடி ஆகும். மேற்கூரை மாற்றப்பட்டிருக்கின்ற மஸ்ஜிதின் உட்புறப் பகுதியின் உயரம் ஏறக்குறைய 91 அடியும், 6 அங்குலமும் ஆகும். அகலம் ஏறக்குறைய 15 அடியும், 6 அங்குலமும் ஆகும். மஸ்ஜிதின் கிழக்கு திசையில் உள்ள வராந்தாவின் எல்லா மேற்கூரைகளையும் உடைத்து அதன் மீது கூரை (Linter) போடப்பட்டுள்ளது. வராந்தாவின் நடுவில் கிழக்கு திசையில் வெளிப் புறத்தில் மெஹ்ராப் வடிவில் ஓர் அழகிய உயர்வான கதவு கட்டப்பட்டுள்ளது. அதனால் அந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க புனிதமான மஸ்ஜிதின் அழகு இரட்டிப்பாகி விடும் - இன்ஷா அல்லாஹ்.

குவிமாடம் மற்றும் மேற்கூறப்பட்ட மினாராக்களின் கட்டடம் அக்ஸா மஸ்ஜிதின் அழகிய மரத்தாலான கதவுகளைப் பொருத்துவது மற்றும் பிற அனைத்து கட்டடப் பணிகள் ஆகியவை ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத் தஆலா அவர்களின் ஒப்புதலுக்கும், வழிகாட்டலுக்கும் ஏற்ப (இந்தியா, நேபாளம், பூட்டான் ஆகியவற்றின்) வக்கீல் த∴மீலோ தன்∴பீஸ் பொறுப்பில் தற்போது இலண்டனில் இருக்கும் மதிப்பிற்குரிய ∴பாத்திஹ் அஹ்மத் கான் டாஹ்ரி சாஹிப் அவர்கள் தமது கண்காணிப்பில் மிகவும் அழகிய முறையில் முழுமை செய்ய ஏற்பாடு செய்தார்கள். جَزَاهُمُ اللّٰهُ اَحْسَنَ الْجَزَاء

அக்ஸா மஸ்ஜிது மற்றும் முபாரக் மஸ்ஜிது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முன்னறிவிப்புகள்

போத்தாலா ஊரைச் செய்த மவ்லவி அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

“எளியவன் காதியான் வந்தபோது நான் தங்கி இருந்த நாட்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வீட்டிலிருந்து முபாரக் மஸ்ஜிதுக்கு வந்தார்கள்......... ஹுஸூர் (அலை) அவர்கள் நின்று கொண்டவாறே, இந்த சிறிய (முபாரக்) மஸ்ஜிதில் இருந்து பெரிய (அக்ஸா) மஸ்ஜிது வரை மஸ்ஜிதாகவே இருக்கிறது என எமக்குக் காட்டப்பட்டதாக முன்னரும் நாம் ஒருமுறை ஒரு நண்பருக்கு கூறியிருந்தது ஒருவேளை நினைவிருக்கலாம் என்று கூறினார்கள்......... அதற்குப் பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொடர்ந்து கூறுவதாவது, இந்த சிறிய மஸ்ஜிதிலிருந்து பெரிய மஸ்ஜிது வரை மஸ்ஜிதாகவே இருப்பதாக இப்போது எனக்கு மீண்டும் காட்டப்பட்டது.”

(அஸ்ஹாபே அஹ்மது தொகுதி 7 பக்கம் 207
தஸ்கிரா பக்கம் 694)

(தொடரும்)

# நூலும் கயிறும்

A.P.Y. அப்துல் காதிர்

திருக்குர்ஆனில் மூன்றிடங்களில் இச்சொற்கள் தவறாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

1) நூலைக் கயிறு என்றும், 2) கைப்பிடியைக் கயிறு என்றும், 3) வடம் என்னும் கனத்த கயிற்றை ஒட்டகம் என்றும் மொழிபெயர்ப்பாளர்கள் தவறாகப் பொருள் கொண்டுள்ளனர்.

திருக்குர்ஆனில் நூல் எனும் சொல் ஓரிடத்திலும், கயிறு எனும் சொல் பல இடங்களிலும் வருகின்றன. அவை பற்றி மொழிபெயர்ப்பாளர்களுள் சிலர், தவறான பொருள் கொடுத்துள்ளனர். அது பற்றி காண்போம்.

திருக்குர்ஆன் 2:188–வது வசனத்தில், 'இருள் விலகி விடியலின் வெண்கதிர்கள் உங்களுக்குத் தெரியும் வரை நீங்கள் உண்ணுங்கள்; பருகுங்கள்' என்று வருகிறது.

இந்த வசனத்தை சிலர், 'வைகறை எனும் வெள்ளைக் கயிறு (இரவு எனும்) கருப்புக் கயிற்றில் இருந்து தெளிவாகும் வரை உண்ணுங்கள்; பருகுங்கள்' என்று மொழிபெயர்த்துள்ளனர். இதில் வெள்ளைக் கயிறு என்றும், கருப்புக் கயிறு என்றும் மொழிபெயர்த்திருப்பது தவறாகும். வெள்ளை நூல், கருப்பு நூல் என்று மொழிபெயர்ப்பதே சரியாகும். திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பாளர்கள் பலர் (தமிழ், ஆங்கிலம் மொழிபெயர்ப்பாளர்கள்) 'கயிறு' என்று கூறாமல் 'நூல்' என்றே பொருள் கொடுத்துள்ளனர்.

خَيْطِ எனும் சொல்லுக்கு 'நூல்' என்பதே சரியான பொருளாகும். கயிற்றைக் குறிக்க حَبْلِ எனும் சொல் திருக்குர்ஆனில் பல இடங்களில் வருகிறது.

திருக்குர்ஆனில் 3:104–வது வசனத்தில், 'நீங்கள் யாவரும் ஒன்றுபட்டு அல்லாஹ்வின் கயிற்றை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்' என்று வருகிறது.

திருக்குர்ஆனில் 2:257–வது வசனத்தில், 'அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறவர் உடையாத மிகவும் உறுதியுள்ள நம்பத்தக்க கைப்பிடி ஒன்றை வலுவாகப் பற்றிக் கொண்டார்' என்று வருகிறது.


இந்த வசனத்திற்கு சிலர், 'அல்லாஹ்வை நம்புபவர் அறுந்து போகாத பலமான கயிற்றைப் பிடித்துக் கொண்டார்' என்று தவறாகப் பொருள் கூறியுள்ளனர். இவ்வசனத்தில் வந்துள்ள عُرْوَةِ எனும் சொல்லுக்கு 'கயிறு' என்று பொருள் கொள்வது தவறாகும். இதற்கு 'கைப்பிடி' என்றுதான் பொருள். சிலர் கயிறு என்றும், பலர் கைப்பிடி என்றும் பொருள் கொண்டுள்ளனர். இவ்வசனத்தில் வரும் لَا انْفِصَامَ எனும் சொல்லுக்கு 'உடையாத' என்று பொருள். கயிறு என்று தவறாகப் பொருள் கொள்பவர்கள் அறுந்து விடாத என்றும் தவறாகப் பொருள் கொள்கின்றனர்.



திருக்குர்ஆன் 7:41–வது வசனத்தில், ஊசித் துளையில் ஒட்டகம் நுழையும் வரையில் அவர்கள் சுவர்க்கத்தில் நுழைய மாட்டார்கள் என்று வருகிறது. இதில் ஒட்டகத்தைக் குறிக்க جَمَلُ எனும் சொல் வருகிறது. ஓரிருவரைத் தவிர பலரும் 'ஜமல்' என்பதற்கு 'ஒட்டகம்' என்றே பொருள் கொண்டுள்ளனர். 'ஜமல்' எனும் சொல்லுக்கு 'வடம்' (கனத்த கயிறு) என்ற ஒரு பொருள் உண்டு.

தமிழில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் 7:41–வது வசனத்திற்கு, ஊசித்துளையில் ஒட்டகம் நுழையும் வரையில் அவர்கள் சுவர்க்கத்தில் நுழைய மாட்டார்கள்

(தொடர்ச்சி 15-ஆம் பக்கம்...)



# ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு

19

- மவ்லானா அப்துர் ரஹீம் தர்து (ரலி) -

தமிழாக்கம்: S.S.H. முஹம்மது லெப்பை

## ஃபஸ்லே உமர் (ரலி) அவர்களின் பிறப்பு

மார்க்கத்தின் பகுத்தறிவு ரீதியான, அடிப்படைத் தேவையான ஆதாரங்களை அளித்து, உலகிலுள்ள அனைத்து வேதங்களின் மீதும் திருக்குர்ஆன் பெற்றுள்ள சிறப்பை நிறுவிய பராஹீனே அஹ்மதிய்யா என்னும் நூலை வெளியிட்ட பின் இஸ்லாத்தின் உண்மை, சிறப்பு, அழகு ஆகியவற்றை இறை அடையாளங்களின் மூலம் எடுத்துக் காட்டுவதற்கும், விளக்கிக் கூறுவதற்கும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் விரும்பினார்கள். அக்காலத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பஞ்சாபிற்கு வெளியே அறியப்படாதவர்களாக இருந்தார்கள். வெளி உலகத்தைப் பொருத்தவரை, ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அதிக முக்கியத்துவம் இல்லாத ஒரு வாழ்க்கையை வாழ்ந்து வந்தார்கள். அப்படிப்பட்ட ஒரு காலத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் முழு உலகிற்கும் இறை அடையாளங்களைக் காட்ட முன் வந்தார்கள். ஆனால் ஹிந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் ஆகிய எந்தப் பிரிவினரும் அவர்களுக்கு அதற்கான வாய்ப்பை வழங்க மறுத்தனர். எனவே மனித இனத்தின் ஆன்மீக நலனுக்காக முற்றிலும் தனித்திருந்து இறைவனின் கருணையை வேண்டினார்கள். எனவே அவர்கள் மூஸா (அலை) அவர்கள் மலையில் கழித்தது போன்று 40 நாட்களை துஆவிலும், இறைவனோடு உரையாடுவதிலும் செலவழித்தார்கள். இந்தக் காலத்தின் இறுதியில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் துஆக்கள் ஒப்புக்கொள்ளப்பட்டன என்ற நற்செய்தியை இறைவன் வழங்கினான். அவர்களுக்கு ஓர் ஆற்றல் மிக்க அடையாளம் வழங்கப்பட்டது. ஆம்! உயிருள்ள இறைவனிடமிருந்து கிடைக்கப் பெற்ற உயிருள்ள அடையாளம்!!

அற்புதமான இந்த அடையாளம் கிடைக்கப் பெற்றதை அறிவிக்கும் முகமாக 1886–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20–ஆம் நாள் ஒரு பிரசுரம் வெளியிடப்பட்டது. 1886–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1–ஆம் தேதி அமிர்தசரஸிலிருந்து வெளி வந்த ரியாஸே ஹிந்து பத்திரிகையின் இணைப்பாகவும் இந்த அறிவிப்பு வெளி வந்தது. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை நோக்கி இறைவன் இவ்வாறு கூறினான்:

“நீர் கேட்டதற்கு இணங்க உமக்கு ஒரு கருணையின் அடையாளத்தைத் தருகிறேன். நான் உம்முடைய வேண்டுதலைக் கேட்டேன். என்னுடைய கருணையால் உம்முடைய வேண்டுதல்களை ஒப்புக்கொள்ளுதல் என்னும் போர்வையால் போர்த்தினேன். (ஹோஷ்யார்பூருக்கும், லூதியானாவுக்கும் மேற்கொண்ட) உம்முடைய பயணத்தை அருளுக்குரியதாக ஆக்கினேன். எனவே, ஆற்றல், கருணை, நெருக்கம் ஆகியவற்றின் ஓர் அடையாளம் உமக்கு வழங்கப்படுகிறது. பேரருள், கருவூலம் ஆகியவற்றின் ஓர் அடையாளம் உமக்கு வழங்கப்படுகிறது. வெற்றி, சாதனை ஆகியவற்றின் திறவுகோல் உமக்கு வழங்கப்படுகிறது. வெற்றி பெற்றவரே! உமக்குச் சமாதானம். வாழ்வைத் தேடுபவர்களை மரணத்தின் பிடியில் இருந்து காப்பாற்றுவதற்காகவும், மண்ணறைகளில் புதைக்கப் –பட்டவர்கள் அவற்றிலிருந்து வெளியே வருவதற்காகவும், இஸ்லாம் மார்க்கத்தின் மேன்மையையும், இறைவனின்



வார்த்தையின் கண்ணியத்தையும் மக்களுக்குத் தெளிவு–படுத்தவும், உண்மை அதன் அனைத்து அருள்களோடு வெளிவருவதற்காகவும், பொய் அதன் தீமைகளோடு வெருண்டோடுவதற்காகவும், நானே ஆற்றல் மிக்கவன் என்பதையும், நான் நினைப்பதை செய்து முடிக்கிறேன் என்பதையும் மக்கள் அறிந்து கொள்வதற்காகவும், நான் உம்மோடு இருக்கிறேன் என்பதை அவர்கள் உறுதியாகத் தெரிந்து கொள்வதற்காகவும், இறைவன் மீது நம்பிக்கை கொள்ளாதவர்களும், அவனுடைய மார்க்கத்தையும் அவனுடைய புனித வேதத்தையும், அவனுடைய திருத்தூதர் (ஸல்) அவர்களையும் மறுப்பவர்களும் ஒரு திறந்த அடையாளத்தைக் கண்டுகொள்வதற்காகவும், அநியாயக்காரர்களின் வழிகள் தெளிவாவதற்காகவும் இறைவன் உம்மோடு பேசினான்.

மேலும், உமக்கு நற்செய்தி! அவர் ஓர் அறிவுக் கூர்மை உள்ள மகனாவார். அவர் உம்முடைய வித்திலிருந்தும், உம்முடைய வம்சத்திலிருந்தும், இனத்–திலிருந்தும் தோன்றுவார். அவர் உம்முடைய விருந்தாளியாக வருவார். அவரது பெயர் இம்மானுவேல் மற்றும் பஷீர் ஆகும். அவருக்கு பரிசுத்த ஆவி வழங்கப்படுகிறது. அவர் பாவத்திற்கு அப்பாற்பட்டவர் ஆவார். அவர் இறைவனின் ஒளி ஆவார். விண்ணிலிருந்து வருகின்ற அவர் அருளுக்குரியவர் ஆவார்.




அவரோடு அருள் இருக்கும்; அது அவரோடு வரும். மிகுந்த பெருமையும், சிறப்பும், செல்வமும் அவருக்கு உரியதாக இருக்கும். அவர் உலகிற்கு வருவார். தம்முடைய ஆன்மீக ஆற்றலாலும், சத்திய ஆவியின் அருளாலும் பலருடைய நோய்களைக் குணமாக்குவார். அவர் இறைவனின் வார்த்தை ஆவார். ஏனென்றால் இறைவனின் கருணையும், பெருமையும் கண்ணியமிக்க வார்த்தைகளோடு அவரை அனுப்பி இருக்கின்றன. அவர் மிகுந்த புத்திக் கூர்மையோடும், அற்புதமான புரிந்து கொள்ளும் ஆற்றலோடும் விளங்குவார். அவர் உள்ளத்தில் தாழ்மைக் குணம் கொண்டவராக விளங்குவார். வெளிப்படையானதும், மறைமுகமானதுமான அனைத்து விஷயங்களைப் பற்றியும் எல்லா விதமான அறிவாலும் அவர் நிரப்பப்படுவார். (இதன் பொருள் எனக்குத் தெளிவாக விளங்கவில்லை.) அது ஒரு திங்கட்கிழமை ஆகும் அந்தத் திங்கட்கிழமை அருளுக்குரியதாகும். அன்பிற்குரிய ஒரு மகனாவார். அவருடைய பெயர் புகழுக்குரியதாகும். அவர் முதல் மற்றும் இறுதியின் வெளிப்பாடாக விளங்குவார். உண்மை, புகழ் ஆகியவற்றின் பிரதிபிம்பமாக விளங்குவார். இறைவனே விண்ணிலிருந்து இறங்கி வந்ததைப் போன்று இருக்கும். அவருடைய தோற்றம் அருளுக்குரியதாகும். ஆன்மீக மேன்மையின் வெளிப்பாடாக அது அமையும். இறைவனின் ஒளி வருகிறது! இறைவனின் ஒளி!! இறைவன் தன்னுடைய மகிழ்ச்சியான நறுமணத்தால் அவரை அனுப்பியிருக்கிறான். நாம் நம்முடைய சொந்த ஆவியை அவருக்குள் ஊதுவோம். அவர் இறைவனின் பாதுகாப்பில் இருப்பார். அவர் மிகவும் வேகமாக வளர்வார். கைதிகளும் அடிமையும் அவரால் விடுதலை பெறுவர். பூமியின் எல்லை வரை அவரது புகழ் பரவும். நாடுகள் அவரால் நல்லருள் பெறும்.''

இறைவனின் இந்த வார்த்தைகளில் அடங்கியுள்ள அழகு, சிறப்பு, கம்பீரம் ஆகியவை நம்பிக்கையாளர்களின் கண்களில் ஆனந்தக் கண்ணீரை வரவழைத்தது. அவர்கள் இறைவனை அறிந்து கொண்டார்கள். அவர்களது நம்பிக்கை அதிகரித்தது. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் எதிரிகள் வாயடைத்துப் போனார்கள். ஆனால் காஷ்மீரைச் சேர்ந்த ஹாஃபிஸ் சுல்தானீ, காதியானைச் சேர்ந்த ஸஃபர் அலி போன்ற சில அறிவில்லாத எதிரிகள், குழந்தை ஏற்கெனவே பிறந்து விட்டது; அந்தச் செய்தி இரகசியமாக வைக்கப்–பட்டுள்ளது. எனவே இந்த முன்னறிவிப்பு ஒரு மோசடியாகும் என்று கூறினர். இந்தப் பொய்யை மறுப்பதற்காக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் 1886–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22–ஆம் நாள் ஒரு பிரசுரம் வெளியிட்டார்கள். அதில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது மனைவி தற்போது அம்பாலாவிலுள்ள சதர் பஸாரில் தமது பெற்றோர்களுடன் இருப்பதாகவும், அங்கு சென்று இந்தக் குற்றச்சாட்டில் உண்மை இல்லை என்பதை உறுதி செய்ய விரும்பு–வோருக்கு அதற்கான செலவுத் தொகையைத் தாம் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பதாகவும் அறிவித்தார்கள்.

இதே மாதத்தில் வாக்களிக்கப்பட்ட மகன் பிறப்பதற்குரிய காலக் கெடு ஒன்பது ஆண்டுகளாகும் என ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்கள். 'இறை வாக்குறுதியின்படி, ஒன்பது ஆண்டு காலத்திற்குள் அப்படிப்பட்ட ஒரு மகன் பிறப்பார்' என அவர்கள் கூறினார்கள். அந்தக் காலக்கெடு மிகவும் நீண்டதாக இருப்பதாகவும், திருமணமான ஒரு தம்பதியருக்கு சாதாரணமாகவே ஒரு மகன் பிறக்கக் கூடும் என்று கூறி முராதாபாத்தைச் சேர்ந்த முன்ஷி இந்தர்மன் என்பவரும் வேறு சிலரும் அந்த நீண்ட காலக்கெடுவை எதிர்த்தனர். 1886–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8–ஆம் நாள் வெளியிட்ட ஒரு பிரசுரத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இந்த ஆட்சேபணைக்குப் பதிலளித்தார்கள். தமக்கு வாக்களிக்கப்பட்டிருப்பது சாதாரண மகனல்ல என்பதையும், அந்த

முன்னறிவிப்பில் கூறப்பட்டிருப்பது ஒளிமயமான ஒரு மகன் என்பதையும் இந்த முன்னறிவிப்பு நிறைவேறுவதற்கு எவ்வளவு காலக்கெடு விதித்தாலும் அது நீண்டதாக இருக்க முடியாது என்பதையும் அன்னார் (அலை) எடுத்துக் காட்டியிருந்தார்கள்.

மேலும் வழிகாட்டுதலைப் பெறுவதற்காக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இறைவன் பக்கம் திரும்பினார்கள். அப்போது விரைவில் ஒரு மகன் பிறப்பார் என்றும், அது அடுத்த குழந்தையாகவோ அல்லது அதற்கடுத்த குழந்தையாகவோ இருக்கக் கூடும் என்று அவர்களுக்கு இறையறிவிப்பு கிடைத்தது. இந்த மகன் 9 ஆண்டுகளுக்குள் பிறப்பார் என்று முன்னரே தமக்கு வாக்களிக்கப்பட்ட அதே குழந்தைதானா அல்லது வேறா எனத் தமக்கு உறுதியாகத் தெரியாது என்பதை 1886–ஆம் ஆண்டு வெளியிட்ட பிரசுரத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தெளிவுபடுத்தியிருந்தார்கள். எப்படி இருந்த போதிலும், இந்த முன்னறிவிப்பு சமீபத்தில் பிறக்கப்போகும் ஒரு மகனைப் பற்றியதாகும். எனவே 9 ஆண்டுகள் என்று குறிப்பிட்டது வெறும் யூகத்தின் அடிப்படையில் அமைந்தது அல்ல என்பதைக் காட்டவே வெளியிடப்பட்டது. இறைவன் சர்வ வல்லமை பொருந்தியவன். அவன் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு மிகக் குறைவான காலத்திற்குள் ஒரு மகனை வழங்க முடியும். காலத்தைப் பொருத்த வரையிலும் அவருடைய பிறப்பை ஓர் அடையாளமாக்கி அவனால் எதிரிகளின் வாயை அடைக்க முடியும்.



இந்தப் பிரசுரத்தின் சில பிரதிகள் முன்னதாகவே பின்வரும் நபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

எம். இந்தர்மன், பண்டிட் லேக்ராம், பண்டிட் சிவ நாராயணன், எம். ஜீவன் தாஸ், எல். ராம இலட்சுமணன், ரெவரெண்ட் இமாவுத்தீன், எல். முரளீதர், ரெவரெண்ட் தாக்கர் தாஸ், எம். அப்துல்லாஹ் ஆத்தம். இவர்கள்தாம் நாடு முழுவதும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு எதிரிகளாக இருந்தவர்கள்.

1886–ஆம் ஆண்டு ஏப்ரல் 15–ஆம் நாள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. (இஸ்மத் என்பது அவர் பெயர்.) இஸ்லாத்தின் மாபெரும் வீரராகத் திகழ்ந்த ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் மீது எப்படியாவது மண்ணை வாரி இரைக்கக் காத்திருந்த அன்னாரின் கொடிய எதிரிகள் பெரும் கேலியையும், அவதூறையும் பரப்ப ஆரம்பித்தனர். கிறித்தவப் பத்திரிகையான நூர் அஃப்ஷான் (3.6.1886), ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த பண்டிட் லேக்ராம் (பார்க்க அவருடைய 25.4.1886 தேதியிட்ட பிரசுரம்), லாஹூருரைச் சேர்ந்த முஸ்லிமான நபி பக்ஷ் மற்றும் பலரும் பெண் குழந்தை பிறந்ததன் மூலம் முன்னறிவிப்பு பொய்யாகி விட்டது என அறிவித்தனர்.

இருந்த போதிலும் லூதியானாவைச் சேர்ந்த மீர் அப்பாஸ் அலி என்பவர் ஜூன் மாதம் 8–ஆம் தேதி ஒரு பிரசுரம் வெளியிட்டார். (அது பட்டாலாவில் இருந்த ஷூலா நூர் அச்சகத்தில் அச்சிடப்பட்டிருந்தது.) அதில் அவர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் எதிரிகள் உண்மையை முற்றிலுமாகத் திரித்துக் கூறியிருந்ததை எடுத்துக் காட்டியிருந்தார். அவரே சில நாட்கள் கழித்து ஒரு பிரசுரம் வெளியிட்டார். (அது அமிர்தசரஸிலிருந்த ரியாஸே ஹிந்து அச்சகத்தில் அச்சிடப்பட்டிருந்தது.) அதில் அவர் சூழ்நிலையை முற்றிலுமாக விளக்கிக் காட்டி, முன்னறிவிப்பில் ஆண் குழந்தை பிறக்கவிருப்பதைக் கூறும்போது அது எந்தவொரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தோடும் வரையறுத்துக் கூறப்படவில்லை என்பதை விளக்கிக் கூறியிருந்தார். குழந்தை பிறக்க இருப்பதாகக் கூறப்பட்ட நேரம் ஒன்றும் முடிந்து விடவில்லை; எனவே அவர்கள் இந்த விஷயத்தில் துள்ளிக் குதிக்க வேண்டிய தேவை இல்லை என்பதையும் எடுத்துக் காட்டி இருந்தார்.

இதற்குப் பிறகு 1886–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் செய்யப்பட்ட முன்னறிவிப்பின் படி, 1887–ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 7–ஆம் நாள் அதிகாலை ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு பஷீர் அஹ்மது எனப் பெயர் சூட்டப்பட்டது. (இப்போது இவர் பஷீரே அவ்வல் அதாவது முதலாவது பஷீர் என அறியப்படுகிறார்கள்.) அவரின் பிறப்பு அன்றைய தினமே ஒரு பிரசுரம் மூலம் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. இதற்கு முன் பெண் குழந்தை பிறந்த நிகழ்ச்சி, கர்ப்பக் காலத்திலேயே குழந்தை ஆணா, பெண்ணா என்பதை அறிந்து முன்னறிவிப்புச் செய்யப்–பட்டது என்ற சந்தேகத்தை எழுப்பியவர்களின் சந்தேகத்தைப் போக்கும் விதத்தில் அமைந்தது. இவ்வாறு அந்த முன்னறிவிப்பு உயிரியல் கணக்கீட்டின் படியோ, அல்லது யூகத்தின் அடிப்படையிலோ செய்யப்பட்டதல்ல; மாறாக, மேலான இறைவனிடமிருந்து பெற்ற இறையறிவிப்பின் அடிப்படையிலேயே செய்யப்பட்டது என்பதைச் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்தது.

முதலாவது பஷீர் பிறந்தவுடன் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட புகழுக்குரிய அந்த மகன் இவர்தான் என வினவி நூற்றுக்கணக்கான கடிதங்கள் வந்தன. அதைப் பற்றி தமக்குத் தெளிவான அடையாளம் எதுவும் வரவில்லை; எனவே இவர்தான் அந்த வாக்களிக்கப்பட்ட மகன் என்று தம்மால் உறுதியாகக் கூற முடியவில்லை என ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அக்கடிதங்களுக்கு பதில் எழுதினார்கள். நன்மை, முழுமையான நேர்மை ஆகிய தன்மைகளில் அந்தக் குழந்தையின் மீது சொரியப்பட்ட இறைப் புகழ்ச்சிகளைக் கருத்திற் கொண்டு அந்த மகனே வாக்களிக்கப்பட்ட மகனாக இருக்கக் கூடும் என ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கருதினார்கள். ஆனால் அது தொடர்பாக தெளிவான அறிவிப்பு எதையும் தாம் பெறவில்லை என்பதால், அந்த விஷயத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் உறுதியாக எதுவும் கூறவில்லை. இதே காரணத்தினால்தான்

அவர்கள் மக்கள் மத்தியில் எந்த அறிவிப்பையும் வெளியிட–வில்லை.

இருந்தபோதிலும், 1888–ஆம் ஆண்டு நவம்பர் 4–ஆம் நாள் முதலாவது பஷீர் 16 மாதங்கள் நிறைவடைந்த நிலையில் மரணித்தபோது, இஸ்லாத்தின் எதிரிகள் இவர்தான் உயிரோடு வாழ்ந்து வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியாக ஆக வேண்டியவர் என்று கூறி, ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை அவமதிப்பதற்காக பெரும் கூக்குரல் எழுப்பினர். அவர்களது எதிரிகள் அமைதி அடையட்டும் என்று கருதி ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் சிறிது காலம் பொறுத்திருந்தார்கள். ஆனால் அவர்கள் தொடர்ந்து மக்களை ஏமாற்றி வருவதைக் கண்ட ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் 1888–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் தேதி ஒரு பிரசுரம் வெளியிட்டார்கள். அமிர்தசரஸில் இருந்து ரியாஸே ஹிந்து அச்சகத்தில் அச்சடிக்கப்பட்ட அந்தப் பிரசுரம் பச்சை நிற தாளில் அச்சடிக்கப்பட்டிருந்ததால் சப்ஸ் இஷ்திஹார் (பச்சைப் பிரசுரம்) என்று அது அழைக்கப்பட்டது.

ஒன்பது ஆண்டுக்குள் பிறப்பார் என்று வாக்களிக்கப்பட்ட அந்த மகன் முதலாம் பஷீர்தான் என்று தாம் ஒருபோதும் அறிவிக்கவில்லை என்பதை அந்தப் பிரசுரத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் எடுத்துக் காட்டியிருந்தார்கள். 1886–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8–ஆம் நாள் வெளியிடப்பட்ட பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருந்த இன்னொரு முன்னறிவிப்பை நிறைவேற்றும் விதமாக முதலாவது பஷீர் பிறந்தார். முதலாவது பஷீர்தான் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி என்று அறிவிக்கும் எந்த அறிவிப்பும் வெளியாகவில்லை. அப்படியே ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அவ்வாறு கருதி இருந்தாலும் அது முன்னறிவிப்பின் முக்கியத்துவம் எதையும் குறைத்து விடப் போவதில்லை. அவர்களுடைய அனுமானம் குறையற்றது என்று கூற முடியாது. ஓர் இறை தூதரின் விளக்கம் சில நேரங்களில் தவறாகிப் போவதுண்டு. இது இறை தூதர்களின் நடைமுறைகளில் எப்போதும் காணப்படுகின்ற நிகழ்வேயாகும். ஆனால் இறைவனின் வார்த்தை தவறாக முடியாது.

இந்த விஷயத்தைப் பொருத்த வரையில், ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் உறுதியான விளக்கம் எதுவும் கூறவில்லை. எனவே அதில் எந்தக் குறையும் சொல்ல முடியாது. உண்மையில் முதலாவது பஷீரின் மரணம் 1886–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வெளியிடப்பட்ட பிரசுரத்தில் அடங்கியிருந்த முன்னறிவிப்பின் ஒரு பகுதியை நிறைவேற்றுகின்ற விதத்தில் அமைந்திருந்தது. அந்த முன்னறிவிப்பு இதுவாகும்:

“நான் உம்மை அளவுக்கதிமாகப் பல்கிப் பெருகச் செய்வேன். உம்முடைய குழந்தைகளை அருள்பாலிப்பேன். ஆனால் அவர்களுள் சிலர் தமது குழந்தைப் பருவத்திலேயே மரணிப்பார்கள்.”

முதலாவது பஷீர் தம்முடைய குழந்தைப் பருவத்திலேயே மரணித்தார். அதன் மூலம் இந்த முன்னறிவிப்பு நிறைவேறியது. எனவே ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது பணியின் முக்கியத்துவத்தை வலியுறுத்திக் கூறினார்கள். இஸ்லாம் ஓர் உயிருள்ள மார்க்கம் என்பதை எடுத்துக் காட்டுவதே தம்முடைய முன்னறிவிப்புகளின் நோக்கமாகும் என்பதை விளக்கமாக எடுத்துரைத்தார்கள். உண்மையைத் தேடும் நேர்மையாளர்கள் இதில் திருப்தி கொண்டார்கள். ஆனால் குற்றம் காணுவதையே தொழிலாகக் கொண்டிருந்தவர்கள் நேர்வழி பெறவில்லை. அப்படிப்பட்ட குதர்க்கப் புத்தி கொண்டவர்கள் எப்போதும் இருளிலும் சந்தேகத்திலுமே உழன்று வருவர்.

இரண்டாவது பஷீர் என்றழைக்கப்படும் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி அவர் பிறப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் நிச்சயம் பிறப்பார் என்றும், அவருடைய பெயர் மஹ்மூது என்றும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் உறுதிபடக் கூறினார்கள். தாம் பெற்ற இறையறிவிப்புகளின் அடிப்படையில் அவருடைய பெயர் ‘ஃபஸ்ல்’ என்றும், ‘ஃபஸ்லே உமர்’ என்றும் இருக்கும் என்று கூறினார்கள்.

1889–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12–ஆம் நாள் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அவருக்கு மஹ்மூது என்று பெயர் சூட்டப்பட்டது. அவர் பிறந்த அன்றைய தினமே பிரசுரம் மூலமாக மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. அந்தக் குழந்தைதான் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி என்ற அறிவிப்பு எதையும் தாம் அதுவரை பெறவில்லை என்ற விபரமும் அதில் குறிப்பிடப்–பட்டிருந்தது. பின்னர் சிராஜே முனீர் (பக்கம் 31), திர்யாக்குல் குலூப் (பக்கம் 40,42), ஹகீகத்துல் வஹி (பக்கம் 260), நுஸூலுல் மஸீஹ் (பக்கம் 192) ஆகிய தமது நூல்களில் இவர்தாம் அந்த வாக்களிக்கப்பட்ட மகன் என்பதை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் உறுதியாகத் தெரிவித்தார்கள்.

இறைவனின் ஆணைக்கிணங்க அந்த மகனே, தாம்தான் அந்த வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி என்று இப்போது உலகுக்கு அறிவித்திருக்கிறார். அன்னார் தமது பிறப்பைப் பற்றிச் செய்யப்பட்ட முன்னறிவிப்பை முற்றிலும் நிறைவேற்றும் விதத்தில் தோன்றினார்கள். 1886–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22–ஆம் தேதி வெளியிட்ட பிரசுரத்தில் அவர் 9 ஆண்டுகளுக்குள் பிறப்பார் என்று முன்னறிவிப்புச் செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க அவர்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் 1889–ஆம் ஆண்டு ஜனவரி 12–ஆம் நாள் பிறந்தார்கள். அவர்களுடைய பெயரும் முன்னறிவிப்பிற்கிணங்கவே அமைந்தது.

(தொடரும்...)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:



“எத்தகைய இறைவனின் இருப்பின் மீது தவ்ராத், இஞ்சீல், திருக்குர்ஆன் ஆகிய மூன்றும் ஒன்றுபட்டுள்ளதோ அத்தகைய இறைவனை ஏற்றுக் கொள்ளுங்கள். இந்த மூன்று வேதங்களிலும் ஒன்றுபட்ட சாட்சியினால் நிரூபணமாகாத எந்தவொரு இறைவனையும் உங்கள் சார்பாக உருவாக்காதீர்கள். அறிவும், பகுத்தறிவும் சாட்சி கூறுகின்ற, இறைவனுடைய வேதங்கள் ஒன்றுபட்டுக் கூறுகின்ற விஷயத்தை ஒப்புக் கொள்ளுங்கள். இறைவனின் வேதங்களில் பிரிவினையை உண்டாக்குகின்ற வகையில் இறைவனை ஏற்றுக் கொள்ளாதீர்கள்”.

(ரூஹானி கஸாயின் தொகுதி 15 பக்கம் 524)

# 700 இறை கட்டளைகள்

(தொகுப்பு: ஹனீஃப் அஹ்மது மஹ்மூது)

தமிழாக்கம்: இப்னு யூசுப்

3

## அல்லாஹ்வின் ஆதிக்கத்தில் எவரையும் இணை ஆக்காதீர்கள்

مَا لَهُمْ مِّنْ دُوْنِهٖ مِنْ وَّلِيٍّ ۚ وَّلَا يُشْرِكُ فِيْ حُكْمِهٖۤ اَحَدًا

அவர்களுக்கு அவனையன்றி உதவி செய்பவர் எவருமில்லை. அவன் தன் அதிகாரத்தில் எவருக்கும் பங்களிப்பதில்லை. (அல் கஹ்.ஃப் 18:27)

اَلَيْسَ اللّٰهُ بِاَحْكَمِ الْحٰكِمِيْنَ ع

அல்லாஹ் தீர்ப்பு வழங்குவோருள் மிகச்சிறந்த தீர்ப்பு வழங்குபவன் இல்லையா? (அத்தீன் 95:9)

## அல்லாஹ்வுடன் பிற தெய்வங்களை அழைத்தல்

فَلَا تَدْعُ مَعَ اللّٰهِ اِلٰهًا اٰخَرَ فَتَكُوْنَ مِنَ الْمُعَذَّبِيْنَ ۚ

எனவே நீர் அல்லாஹ்வுடன் வேறெந்தக் கடவுளையும் அழைக்காதீர். அவ்வாறு செய்தால் நீர் தண்டனைக்குள்ளாக்கப் படுபவர்களைச் சார்ந்தவராகி விடுவீர். (அஷ்ஷுஅரா 26:214)

وَالَّذِيْنَ لَا يَدْعُوْنَ مَعَ اللّٰهِ اِلٰهًا اٰخَرَ وَلَا يَقْتُلُوْنَ النَّفْسَ الَّتِيْ
حَرَّمَ اللّٰهُ اِلَّا بِالْحَقِّ وَلَا يَزْنُوْنَ ۚ وَمَنْ يَّفْعَلْ ذٰلِكَ يَلْقَ اَثَامًا ۙ

மேலும் அவர்கள் அல்லாஹ்வுடன் வேறெந்த (பொய்க்) கடவுளையும் அழைக்க மாட்டார்கள். மேலும் அல்லாஹ், (கொல்லக் கூடாது என்று) தடுத்த எவரையும் நியாயமான காரணமின்றிக் கொலை செய்ய மாட்டார்கள். மேலும் அவர்கள் விபச்சாரம் செய்ய மாட்டார்கள். இதனைச் செய்பவர் (தன்) பாவத்திற்குரிய தண்டனை -யைப் பெற்றுக் கொள்வார். (அல் .ஃ.புர்கான் 25:69)

وَمَنْ يَّدْعُ مَعَ اللّٰهِ اِلٰهًا اٰخَرَ ۙ لَا بُرْهَانَ لَهٗ بِهٖ ۙ فَاِنَّمَا حِسَابُهٗ
عِنْدَ رَبِّهٖ ؕ اِنَّهٗ لَا يُفْلِحُ الْكٰفِرُوْنَ

மேலும், எந்தச் சான்றுமில்லாது அல்லாஹ்வுடன் வேறு கடவுளை அழைப்பவரின் கணக்கு அவரது இறைவனிடமுள்ளது. நிச்சயமாக நிராகரிப்பவர்கள் ஒருபோதும் வெற்றி பெற மாட்டார்கள். (அல் மு.ஃ.மினூன் 23:118)

قُلْ اِنِّيْ نُهِيْتُ اَنْ اَعْبُدَ الَّذِيْنَ تَدْعُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ ؕ قُلْ لَّاۤ اَتَّبِعُ
اَهْوَآءَكُمْ ۙ قَدْ ضَلَلْتُ اِذًا وَّمَاۤ اَنَا مِنَ الْمُهْتَدِيْنَ

நீர் (அவர்களிடம்) கூறுவீராக: அல்லாஹ்வையன்றி நீங்கள் அழைப்பவை(களான பொய்யான தெய்வங்)களை நான் வணங்கக்கூடாதென்று (முற்றிலும்) தடுக்கப்பட்டுள்ளேன். நீர் (அவர்களிடம்) கூறுவீராக: நான் உங்களுடைய (இழிவான) விருப்பங்களைப் பின்பற்ற மாட்டேன். (நான் அவ்வாறு செய்தால்) அப்பொழுது நான் வழிதவறியவன் (என்றும்) நான் நேர்வழி பெற்றவர்களைச் சார்ந்தவன் அல்லன் (என்றும் புரிந்து கொள்ளுங்கள்). (அல் அன்ஆம் 6:57)

قُلْ اِنِّيْ نُهِيْتُ اَنْ اَعْبُدَ الَّذِيْنَ تَدْعُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ لَمَّا جَآءَنِيَ
الْبَيِّنٰتُ مِنْ رَّبِّيْ ۟ وَاُمِرْتُ اَنْ اُسْلِمَ لِرَبِّ الْعٰلَمِيْنَ

நீர் கூறுவீராக: என் இறைவனிடமிருந்து தெளிவான சான்றுகள் என்னிடம் வந்திருக்கின்றன. எனவே, அல்லாஹ்வையன்றி நீங்கள் அழைப்பவற்றை நான் வணங்கக்கூடாதென்று தடை செய்யப்பட்டுள்ளேன். அனைத்து உலகங்களின் இறைவனுக்கே நான் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்றும் நான் கட்டளையிடப் -பட்டுள்ளேன். (அல் மு.ஃ.மின் 40:67)




## இணை வைப்பதிலிருந்து தவிர்ந்து கொள்ளுதல் மற்றும் விலகி இருத்தல்

وَاَعْرِضْ عَنِ الْمُشْرِكِيْنَ

மேலும் இணை வைப்பவர்களை விட்டு நீர் விலகிக் கொள்வீராக. (அல் அன்ஆம் 6:107)

اِنْ نَّقُوْلُ اِلَّا اعْتَرٰىكَ بَعْضُ اٰلِهَتِنَا بِسُوْٓءٍ ؕ
قَالَ اِنِّيْۤ اُشْهِدُ اللّٰهَ وَاشْهَدُوْۤا اَنِّيْ بَرِيْٓءٌ مِّمَّا تُشْرِكُوْنَ ۙ

எங்களுடைய ஏதாவதொரு தெய்வம், இழிவுபடுத்துவதற்காக உம்மைத் தாக்கியுள்ளது என்பதைத் தவிர (வேறெதனையும்) நாங்கள் சொல்வதற்கில்லை. (இதற்கு) அவர் இவ்வாறு கூறினார்: நீங்கள் அவனைத் தவிர (அல்லாஹ்வுக்கு) இணையாக ஆக்கிக் கொள்வதில் இருந்து நான் விலகியுள்ளேன் என்பதற்கு அல்லாஹ்வை நான் சாட்சியாக்குகின்றேன். நீங்களும் (அதற்குச்) சாட்சியாக இருங்கள். (அல் ஹூது 11:55)

فَاصْدَعْ بِمَا تُؤْمَرُ وَاَعْرِضْ عَنِ الْمُشْرِكِيْنَ

(அவர்களுக்குத் தெரிவிக்குமாறு) உமக்குக் கட்டளையிடப்பட்ட செய்தியினை, நீர் தெளிவாக அறிவிப்பீராக. மேலும் இணைவைப்பவர்களைப் புறக்கணித்து விடுவீராக. (அல் ஹிஜ்ர் 15:95)



## அல்லாஹ்வின் மீது இட்டுக்கட்டுபவர்களை விட்டு விலகி இருத்தல்

فَذَرْهُمْ وَمَا يَفْتَرُوْنَ

எனவே நீர் அவர்களையும் அவர்களின் கட்டுக் கதையையும் விட்டு விடுக. (அல் அன்ஆம் 6:113)

فَذَرْهُمْ وَمَا يَفْتَرُوْنَ

எனவே நீர் அவர்களையும் அவர்களின் பொய்யினையும் விட்டு விடுவீராக. (அல் அன்ஆம் 6:138)

## நபிமார்கள் மற்றும் அவர்களின் சந்ததிகளுக்கு இணை வைத்தலில் இருந்து விலகி இருப்பதற்கான அறிவுரை

وَلَا تَكُوْنَنَّ مِنَ الْمُشْرِكِيْنَ

நீர் ஒருபோதும் இணைவைப்பவர்களைச் சேர்ந்தவராகி விடவேண்டாம். (யூனுஸ் 10:106)

يٰبُنَيَّ لَا تُشْرِكْ بِاللّٰهِ ؕ اِنَّ الشِّرْكَ لَظُلْمٌ عَظِيْمٌ

என் அருமை மகனே! நீ அல்லாஹ்வுக்கு இணை வைக்காதே. நிச்சயமாக (அவனுக்கு) இணை வைப்பது மாபெரும் அநீதியாகும் எனக் கூறினார். (லுக்மான் 31:14)

قُلْ اِنِّىْۤ اُمِرْتُ اَنْ اَكُوْنَ اَوَّلَ مَنْ اَسْلَمَ وَلَا تَكُوْنَنَّ مِنَ الْمُشْرِكِيْنَ

நீர் கூறுவீராக! கட்டுப்பட்டு நடப்பவர்களில் முதன்மையானவனாக இருக்க வேண்டும் என்று நான் கட்டளையிடப்பட்டுள்ளேன். மேலும் (தூதரே) நீர் (இறைவனுக்கு) இணைவைப்போரைச் சார்ந்தவராக இருக்க வேண்டாம். (அல் அன்ஆம் 6:15)

## இன்னல்களுக்குப் பிறகு ஈடேற்றம் பெறுதல், அருட்கொடைகள் இறங்கிய பிறகு மீண்டும் புற முதுகை காட்டுவது மற்றும் இணைவைத்தலின் பக்கம் மீண்டும் திரும்புவதிலிருந்து தடுக்கப்பட்டுள்ளது

فَاِذَا رَكِبُوْا فِى الْفُلْكِ دَعَوُا اللّٰهَ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ ۚ
فَلَمَّا نَجّٰىهُمْ اِلَى الْبَرِّ اِذَا هُمْ يُشْرِكُوْنَ ۙ

அவர்கள் கப்பலில் ஏறிச் செல்லும் போது, நம்பிக்கையை முழுமையாக அல்லாஹ்வுக்காக மட்டும் ஆக்கியவர்களாக, கலப்பற்ற உள்ளத்துடன் அவனை அழைக்கின்றனர். ஆனால் அவர்களைக் காப்பாற்றிக் கரைக்குக் கொண்டு வந்ததும்(அவனுக்கு மீண்டும்) இணை வைக்கத் தொடங்கி விடுகின்றனர். (அல் அன்கபூத் 29:66)

وَاِذَا غَشِيَهُمْ مَّوْجٌ كَالظُّلَلِ دَعَوُا اللّٰهَ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ ۚ فَلَمَّا نَجّٰىهُمْ
اِلَى الْبَرِّ فَمِنْهُمْ مُّقْتَصِدٌ ؕ وَمَا يَجْحَدُ بِاٰيٰتِنَاۤ اِلَّا كُلُّ خَتَّارٍ كَفُوْرٍ

அலைகள் நிழலைப் போன்று அவர்களை மூடிக் கொள்ளும் போது, அவர்கள் அல்லாஹ்விடம் கலப்பற்ற நம்பிக்கை கொண்டவர்களாக அவனை அழைக் -கின்றனர். ஆனால், அவன் அவர்களைக் காப்பாற்றிக் கரைக்குக் கொண்டு வந்ததன் பின்னர் அவர்களுள் சிலர் நடுநிலையைக் கடைப்பிடிக்கின்றனர். நம்பிக்கை துரோகியையும், நன்றி கெட்டவனையும் தவிர வேறெவனும் எம்முடைய வசனங்களை மறுப்பதில்லை. (லுக்மான் 31:33)

وَيٰقَوْمِ اسْتَغْفِرُوْا رَبَّكُمْ ثُمَّ تُوْبُوْۤا اِلَيْهِ يُرْسِلِ السَّمَآءَ عَلَيْكُمْ
مِّدْرَارًا وَّ يَزِدْكُمْ قُوَّةً اِلٰى قُوَّتِكُمْ وَلَا تَتَوَلَّوْا مُجْرِمِيْنَ

என் சமுதாயத்தினரே! நீங்கள் உங்கள் இறைவனிடம் பாவமன்னிப்புக் கேளுங்கள். பின்னர் அவன் பக்கம் (முழுமையாகத்) திரும்பிவிடுங்கள். இதன் விளைவாக அவன் உங்களுக்கு நன்றாக மழை பொழியக்கூடிய மேகத்தை அனுப்புவான். உங்களுக்கு மேன்மேலும் வலிமையினை வழங்குவான். நீங்கள் குற்றவாளிகளாகி (அவனிடமிருந்து) திரும்பி விடாதீர்கள். (ஹூது 11:53)

ثُمَّ اِذَا كَشَفَ الضُّرَّ عَنْكُمْ اِذَا فَرِيْقٌ مِّنْكُمْ بِرَبِّهِمْ يُشْرِكُوْنَ ۙ
لِيَكْفُرُوْا بِمَاۤ اٰتَيْنٰهُمْ ؕ فَتَمَتَّعُوْا ۗ فَسَوْفَ تَعْلَمُوْنَ

பிறகு அவன் உங்களிடமிருந்து அந்தத் துன்பத்தை அகற்றினால், உடனே உங்களுள் ஒரு

பிரிவினர் தங்கள் இறைவனுக்கு இணை வைக்கின்றனர். இதனால் நாம் அவர்களுக்கு வழங்கியதை அவர்கள் மறுக்கின்றனர். எனவே, நீங்கள் தற்காலிகமான பலன் பெறுங்கள். (இதன் முடிவையும்) நீங்கள் விரைவில் தெரிந்து கொள்வீர்கள். (அந் நஹ்ல் 16:55-56)

### அவன் ஒருவனே அவனுக்கு இணை இல்லை என்பது தொடர்பாக எச்சரிப்பதற்கான கட்டளை

أَنْ أَنذِرُوٓا۟ أَنَّهُۥ لَآ إِلَٰهَ إِلَّآ أَنَا۠ فَٱتَّقُونِ

“வணக்கத்திற்குரியவன் என்னைத் தவிர வேறு எவனும் இல்லை. எனவே எனக்கே அஞ்சுங்கள்” என எச்சரிப்பீராக. (அந் நஹ்ல் 16:3)

### இறைவனுக்கு மகன் உண்டு என்று கூறுபவர்களை எச்சரித்தல்

وَيُنذِرَ ٱلَّذِينَ قَالُوا۟ ٱتَّخَذَ ٱللَّهُ وَلَدًا ۝

அல்லாஹ் தனக்கென ஒரு மகனைக் கொண்டுள்ளான் என்று கூறுபவரை இது எச்சரிக்கையும் செய்கிறது. (அல் கஹ்.ஃப் 18:5)

### அல்லாஹ் சந்ததிகளிலிருந்து தூய்மையானவன் மற்றும் அவன் யாருக்கும் தந்தை இல்லை

وَقُلِ ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِى لَمْ يَتَّخِذْ وَلَدًا وَلَمْ يَكُن لَّهُۥ شَرِيكٌ
فِى ٱلْمُلْكِ وَلَمْ يَكُن لَّهُۥ وَلِىٌّ مِّنَ ٱلذُّلِّ ۖ وَكَبِّرْهُ تَكْبِيرًۢا ۝

நீர் கூறுக: அல்லாஹ்வே எல்லாப் புகழுக்கும் உரியவன். அவனுக்கு மகன் இல்லை. அவனுடைய ஆட்சியில் அவனுக்கு கூட்டாளி எவரும் இலர். அவனின் ஆற்றலின்மை காரணமாக அவனுக்கு நண்பர் ஆனவரும் எவருமிலர். நீர் அவனுடைய பெருமையைப் போற்றிப் புகழ்க. (பனீ இஸ்ராயீல் 17:112)

مَا كَانَ لِلَّهِ أَن يَتَّخِذَ مِن وَلَدٍ ۖ سُبْحَٰنَهُۥٓ ۚ

ஒரு மகனை உருவாக்கிக் கொள்வதென்பது அல்லாஹ்(வுடைய உயர் தகுதி)க்கு பொருத்தமான -தன்று. அவன் தூய்மையானவன். (மர்யம் 19:36)

قَالُوا۟ ٱتَّخَذَ ٱللَّهُ وَلَدًا ۗ سُبْحَٰنَهُۥ ۖ هُوَ ٱلْغَنِىُّ ۖ لَهُۥ مَا فِى ٱلسَّمَٰوَٰتِ وَمَا فِى
ٱلْأَرْضِ ۚ إِنْ عِندَكُم مِّن سُلْطَٰنٍۭ بِهَٰذَآ ۚ أَتَقُولُونَ عَلَى ٱللَّهِ مَا لَا تَعْلَمُونَ

அல்லாஹ் (தனக்கு) ஒரு மகனை ஏற்படுத்திக் கொண்டான் என அவர்கள் கூறுகின்றனர். (ஆனால்) அவன் தூய்மையானவன். அவன் தன்னிறைவு பெற்றவன். வானங்களிலும், பூமியிலும் உள்ளவை(யெல்லாம்) அவனுக்கே உரியன. இ(ந்)த (வாதத்தி)ற்கு உங்களிடம் எந்தச் சான்றும் இல்லை. நீங்கள் தெரியாத ஒன்றை அல்லாஹ்வைக் குறித்துக் கூறுகின்றீர்களா? (யூனுஸ் 10:69)



وَلَا تَقُولُوا۟ ثَلَٰثَةٌ ۚ ٱنتَهُوا۟ خَيْرًا لَّكُمْ ۚ إِنَّمَا ٱللَّهُ إِلَٰهٌ وَٰحِدٌ ۖ
سُبْحَٰنَهُۥٓ أَن يَكُونَ لَهُۥ وَلَدٌ ۘ

(கடவுள்) மூன்று எனக் கூறாதீர்கள். (அவ்வாறு கூறுவதிலிருந்து) விலகிக் கொள்ளுங்கள். இது உங்களுக்கு நல்லது. நிச்சயமாக வணக்கத்திற்குரிய ஒருவன் அல்லாஹ் மட்டுமே. அவனுக்கு மகன் உண்டு என்பது அவனது தூய்மைக்கு அப்பாற்பட்டது. (அந்நிஸா 4:172)

وَجَعَلُوا۟ لِلَّهِ شُرَكَآءَ ٱلْجِنَّ وَخَلَقَهُمْ ۖ وَخَرَقُوا۟ لَهُۥ بَنِينَ
وَبَنَٰتٍۭ بِغَيْرِ عِلْمٍ ۚ سُبْحَٰنَهُۥ وَتَعَٰلَىٰ عَمَّا يَصِفُونَ ۝

ஜின்களை அவனே படைத்திருந்தும், அவர்களை அல்லாஹ்வுக்கு இணையாக்குகின்றனர். அவர்கள் எந்த அறிவும் இல்லாமல் அவனுக்கு ஆண் மக்களையும், பெண் மக்களையும் பொய்யாக ஏற்படுத்தியுள்ளனர். அவன் தூய்மையானவனும் அவர்கள் வருணிப்பவற்றி -லிருந்தும் மேலானவனுமாவான். (அல் அன்ஆம் 6:101)

مَا ٱتَّخَذَ ٱللَّهُ مِن وَلَدٍ وَمَا كَانَ مَعَهُۥ مِنْ إِلَٰهٍ ۚ إِذًا لَّذَهَبَ كُلُّ
إِلَٰهٍۭ بِمَا خَلَقَ وَلَعَلَا بَعْضُهُمْ عَلَىٰ بَعْضٍ ۚ سُبْحَٰنَ ٱللَّهِ عَمَّا يَصِفُونَ ۝

அல்லாஹ் எவரையும் மகனாக ஆக்கிக் கொள்ளவில்லை. அவனுடன் வேறெந்தக் கடவுளும் இல்லை. அவ்வாறு இருப்பின் ஒவ்வொரு கடவுளும் தான் படைத்தவற்றைத் தனியாகப் பிரித்துக் கொண்டு சென்றிருக்கும். (கடவுள்களாகிய) அவற்றுள் சில, சிலவற்றின் மீது ஆதிக்கம் செலுத்தி இருக்கும். அவர்கள் கூறுபவற்றை விட்டும் அல்லாஹ் தூயவனாவான். (அல் மு.ஃமினூன் 23:92)

وَلَمْ يَتَّخِذْ وَلَدًا وَلَمْ يَكُن لَّهُۥ شَرِيكٌ فِى ٱلْمُلْكِ

அவன் எந்த மகனையும் ஏற்படுத்திக் கொள்ள -வில்லை. அவனது ஆட்சியில் அவனுக்குப் பங்காளி எவரும் இல்லை. (அல் .ஃபுர்கான் 25:3)

لَوْ اَرَادَ اللّٰهُ اَنْ يَّتَّخِذَ وَلَدًا لَّاصْطَفٰى مِمَّا يَخْلُقُ مَا يَشَآءُ ۙ
سُبْحٰنَهٗ ؕ هُوَ اللّٰهُ الْوَاحِدُ الْقَهَّارُ

அல்லாஹ், ஒரு மகனை உண்டாக்கிக் கொள்ள விரும்பியிருந்தால், அவன் படைப்பதிலிருந்து, அவன் விரும்புவதைத் தேர்ந்தெடுத்திருப்பான். அவன் தூய்மை-யானவன். அல்லாஹ் ஒருவனே, அவன் முழுமையான அதிகாரத்தைக் கொண்டவனாவான். (அஸ் ஸுமர் 39:5)

وَقَالُوا اتَّخَذَ اللّٰهُ وَلَدًا ۙ سُبْحٰنَهٗ ؕ بَلْ لَّهٗ مَا فِى السَّمٰوٰتِ
وَالْاَرْضِ ؕ كُلٌّ لَّهٗ قٰنِتُوْنَ

மேலும் அல்லாஹ் (தனக்கென) ஒரு மகனை உண்டாக்கிக் கொண்டான் என அவர்கள் கூறுகின்றனர். (அவர்களின் கூற்று சரியன்று.) அவன் தூயவன். இன்னும் கூறுவதாயின், வானங்களிலும் பூமியிலும் உள்ளவை அவனுக்கே உரியன. எல்லாம் அவனுக்குக் கட்டுப்-பட்டவை. (அல் பகரா 2:117)

رُسُلًا مُّبَشِّرِيْنَ وَمُنْذِرِيْنَ لِئَلَّا يَكُوْنَ لِلنَّاسِ عَلَى اللّٰهِ
حُجَّةٌ ۢ بَعْدَ الرُّسُلِ ؕ وَكَانَ اللّٰهُ عَزِيْزًا حَكِيْمًا

(இத்தூதர்களுக்குப் பின்னர்), மக்கள் அல்லாஹ்-வின் மீது எவ்விதக் குற்றச்சாட்டும் செய்யாமல் இருப்பதற்காக நற்செய்தியாளர்களும் எச்சரிக்கை செய்பவர்களுமான தூதர்களை அனுப்பினோம். மேலும், அல்லாஹ் வல்லோனும் ஞானமுள்ளவனுமாவான். (அந்நிஸா 4:166)

وَقَالُوا اتَّخَذَ الرَّحْمٰنُ وَلَدًا سُبْحٰنَهٗ ؕ بَلْ عِبَادٌ مُّكْرَمُوْنَ ۙ

அளவற்ற அருளாள(னான இறைவ)ன் மகனை உருவாக்கிக் கொண்டான் என்று அவர்கள் கூறுகின்றனர். அவன் (எல்லாப் பலவீனங்களிலிருந்தும்) தூய்மை-யானவன். அது மட்டுமன்று (அவர்கள் எவர்களை இறைவனுடைய மகன்கள் எனக் கூறுகின்றனரோ) அவர்கள் (இறைவனால்) கண்ணியப்படுத்தப்பட்ட அடியார்களாவார்கள். (அல் அன்பியா 21:27)

وَقَالُوا اتَّخَذَ الرَّحْمٰنُ وَلَدًا ؕ

மேலும் அளவற்ற அருளாள(னான இறைவ)ன் தனக்கு ஒரு மகனை உருவாக்கிக் கொண்டான் என்று அவர்கள் கூறுகின்றனர். (மர்யம் 19:89)

سُبْحٰنَ رَبِّ السَّمٰوٰتِ وَالْاَرْضِ رَبِّ الْعَرْشِ عَمَّا يَصِفُوْنَ

வானங்கள், பூமி ஆகியவற்றிற்கு இறைவனாகவும், அரியணைக்கு இறைவனாகவும் விளங்குபவன் அவர்கள் கற்பிக்கின்ற (இணைகள் எல்லா)வற்றை விட்டும் தூயவனாவான். (அஸ் ஸுக்ருஃப் 43:83)

(தொடரும்...)

*(7-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

என்று பொருள் கூறினாலும், அடிக்குறிப்பில் இங்கு 'ஒட்டகம்' என்று மொழிபெயர்த்துள்ள 'ஜமல்' என்ற சொல்லுக்கு 'கனத்த கயிறு' என்றும் பொருள் உண்டு. எனவே இவ்விடத்தில் 'கனத்த கயிறு' என்று பொருள் கொள்வதே பொருத்தமாக இருக்கும் என்று கூறியுள்ளது.



மேலும் 77:34 வசனத்-தில், மஞ்சள் நிற ஒட்டகங்-களுக்குப் பதிலாக அவை பெரிய கப்பல்களைக் கட்டு-கின்ற மஞ்சள் நிற வடங் (கயிறு)களாகத் தென்படும் அளவுக்கு உயரமாக இருக்-கின்றன என்று பொருள் கூறுகிறது.

(ஆதாரம்: அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் திருக்குர்ஆன் தமிழாக்கம் புதிய பதிப்பு பக்கம் 1701)

# உண்மையான செல்வந்தர்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“எவரிடம் அதிகமாக செல்வம் இருக்கின்றதோ அவர் செல்வந்தர் அல்ல. மாறாக, எவர் உள்ளத்தால் தன்னிறைவு பெற்றவராக இருக்கின்றாரோ, அதாவது இறைவனின் வழியில் மனந்திறந்து செலவு செய்கின்றாரோ அவரே உண்மையான செல்வந்தர் ஆவார்.”

(திர்மிதி அப்வாபுஸ் ஸுஹுத் பாபு மாஜாஅ அன் அல்கினா கினன் னஃப்ஸி)

# சிறுவர் பகுதி

# மார்க்க அறிவுப் புத்தகம் 9



தமிழாக்கம்: M.M. இப்ராஹீம்

## 3. இஸ்லாமிய வரலாறு

76. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் இயற்பெயர் என்ன?

ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் இயற்பெயர் அப்துல்லாஹ் பின் அபி கஃபா என்பதாகும்.

77. குலஃபாயே ராஷிதீன் பெயர்களையும் அவர்களின் பதவிக் காலத்தையும் கூறுக:

1) ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள்
   ஹிஜ்ரி 11 முதல் 13 வரை (கி.பி. 632-634)
2) ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள்
   ஹிஜ்ரி 13 முதல் 24 வரை (கி.பி. 634-644)
3) ஹஸ்ரத உஸ்மான் (ரலி) அவர்கள்
   ஹிஜ்ரி 23 முதல் 35 வரை (கி.பி. 644-656)
4) ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள்
   ஹிஜ்ரி 35 முதல் 40 வரை (கி.பி. 656-661)

78. 'துன்நூரைன்' என்பவர் யார்?

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை 'துன்நூரைன்' என்கிறோம். ஏனெனில் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் இரு புதல்விகளை ஒருவர் பின் ஒருவராக மணந்தவர் ஆவார்கள்.

79. அபூஹுரைரா என்பவர் யார்? அவர் ஏன் இவ்வாறு அழைக்கப்பட்டார்?

அபூஹுரைரா என்பவர் பெருமானார் (ஸல்) அவர்களின் ஒரு தோழர் ஆவார்கள். அவர் ஒரு பூனையை நேசித்து வளர்த்து வந்தார்கள். எனவே 'பூனையின் தந்தை' என்று பொருள்படும் 'அபூஹுரைரா' என்று அழைக்கப்படலானார்கள்.

80. அபூஹுரைரா (ரலி) அவர்களின் இயற்பெயர் என்ன?

அபூஹுரைரா என்பவரின் இயற்பெயர் 'உமைர்' என்பதாகும்.

81. அஸ்ஹாபுஸ் ஸுஃப்பா என்பவர் யார்?

அஸ்ஹாபுஸ் ஸுஃப்பா என்பவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் திண்ணைத் தோழர்கள் ஆவர். இவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் கதவருகே உட்கார்ந்து கொண்டு பெருமானார் (ஸல்) அவர்கள் திருவாய் மொழிதலையும் அவர்களின் நடைமுறை-யையும் உற்று கவனித்து பிற முஸ்லிம்களுக்குப் பரப்பியோர் ஆவர்.

82. அஷ்ரா முபஷ்ஷிரா என்பவர்கள் யார்?

ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்களால் சொர்கத்திற்கான நற்செய்தி கூறப்பட்ட பத்து நபர்கள் ஆவார்கள்.

1) ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி)
2) ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி)
3) ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் (ரலி)
4) ஹஸ்ரத் அலீ பின் அபீதாலிப் (ரலி)
5) ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி)
6) ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி)
7) ஹஸ்ரத் சயீத் பின் ஸெய்த் (ரலி)
8) ஹஸ்ரத் தல்ஹா (ரலி)
9) ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம் (ரலி)
10) ஹஸ்ரத் ஸஅத் பின் அபீவக்காஸ் (ரலி)

83. ஹிஜ்ரி நாட்காட்டியைத் துவங்கியவர் யார்?

ஹிஜ்ரி நாட்காட்டியைத் துவங்கியவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆவார்கள்.



84. ஹிஜ்ரி நாட்காட்டியின் மாதங்களின் பெயர் கூறுக:

1) முஹர்ரம் 2) ஸ..பர்
3) ரபிய்யுல் அவ்வல் 4) ரபிய்யுஸ் ஸானி
5) ஜமாதில் அவ்வல் 6) ஜமாதிஸ் ஸானி
7) ரஜப் 8) ஷஅபான்
9) ரமலான் 10) ஷவ்வால்
11) துல் கஅதா 12) துல் ஹஜ்

ஆகியவையாகும்.

85. ஹில்..புல் ..புஸூல் என்றால் என்ன?

பெருமானார் (ஸல்) அவர்கள் சிறு வயதினராக இருக்கும்போதே ஹில்..புல் ..புஸூல் என்ற ஓர் உடன்படிக்கையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்கள். அதன் நோக்கம் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மற்றும் ஏழை எளியோருக்கு உதவுவதாகும்.

86. எகிப்தின் வெற்றியாளர் என்று அழைக்கப்பட்டவர் யார்?

ஹஸ்ரத் அம்ர் பின் அல் ஆஸ் (ரலி) எகிப்தின் வெற்றியாளர் என்று அழைக்கப்பட்டார்.

87. ஈரானை வெற்றி கொண்டவர் யார்?

ஹஸ்ரத் ஸஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) ஈரானை வெற்றி கொண்டார்கள்.

88. ஸ்பெயினை வெற்றி கொண்டவர் யார்?

ஹஸ்ரத் தாரிக் பின் ஸியாத் என்னும் தளபதி ஸ்பெயினை வெற்றி கொண்டார்.

89. 'சிந்து' வெற்றியாளர் யார்?

உமய்யாக்களின் ஆட்சிக் காலத்தில் முகம்மது பின் காசிம் என்ற படைத்தளபதி சிந்துவை வெற்றி கொண்டார்.

90. புகழ்பெற்ற மூன்று முஸ்லிம் விஞ்ஞானிகளைக் கூறுக:

1) ஜாபிர் பின் ஹய்யான் - இவர் ஒரு வேதியியல் நிபுணர் ஆவார்.
2) அல் பிரூனி - இவர் கணிதம் மற்றும் நிலவியல் துறை நிபுணர் ஆவார்.
3) பேராசிரியர் அப்துஸ் ஸலாம் - இவர் ஒரு இயற்பியல் வல்லுநர் ஆவார்.



91. முதன் முதலில் நோபல் பரிசு பெற்ற முஸ்லிம் விஞ்ஞானி யார்?

பேராசிரியர் அப்துஸ் ஸலாம் 1979-ஆம் ஆண்டில் இயற்பியலுக்கான நோபல் பரிசு பெற்ற முதல் முஸ்லிம் விஞ்ஞானி ஆவார்.

(தொடரும்...)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

உங்களது செயல்களைத் தூய்மையாக்கிக் கொள்ளுங்கள். மேலும், இறைவனை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். கவனக்குறைவாக இருக்காதீர்கள். ஓடக்கூடிய இரை சிறிதளவு சோம்பேறி ஆகிவிடும்போது வேட்டைக்காரன் அதனை தன் வசமாக்கிக் கொள்கின்றான். அதைப் போன்று இறைவனின் நினைவிலிருந்து கவனக் குறைவாக இருக்கக் கூடியவர் ஷெய்த்தானுக்கு இரையாகி விடுகின்றார். தவ்பாவை எப்போதும் உயிர்ப்புடன் வையுங்கள்; ஒருபோதும் மரணித்ததாக ஆக்கி விடாதீர்கள். அதாவது தவ்பா செய்யாமல் ஒருபோதும் இருக்காதீர்கள். எப்போதும் தவ்பா செய்து கொண்டி-ருங்கள். ஏனெனில், எந்த உறுப்புகளைக் கொண்டு பணி செய்யப்படுகின்றதோ அதுவே பயன்படக்கூடியதாக இருக்க முடியும். மேலும், எது வீணாக விட்டு விடப்படுமோ அது பின்னர் நிரந்தரமாகவே செயலிழந்து விடுகின்றது. இதே போன்று தவ்பாவையும் செயல்படக் கூடியதாக ஆக்குங்கள். அப்போது தான் அது செயலிழந்ததாக ஆகி விடாது.




நீங்கள் உண்மையான தவ்பா செய்ய-வில்லை என்றால், பின்னர் அது கற்களில் விதைக்கப்பட்ட விதையைப் போன்றதாகும். (ஆனால்) அது உண்மையான தவ்பாவாக இருந்தால் பின்னர் அது சிறந்த நிலத்தில் விதைக்கப்பட்ட விதையைப் போன்றதாகும். தனக்கான நேரத்தில் அது கனியைக் கொடுக்கும்.

(ஜுமுஆ குத்பா 28.04.2023)

# யார் நல்ல மனிதர்?

(ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் ‘மின்ஹாஜுத் தாலிபீன்’ என்ற நூலிலிருந்து) 2


தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மது

இப்போது முழுமை பெற்ற மனிதனின் வரையறை என்ன என்ற கேள்வியின் பக்கம் திரும்புவோம். ஒரு முழுமை பெற்ற மனிதன் எந்த அளவிற்கு பாவத்தில் இருந்து விடுபட்டிருப்பார் எனில், மரணத்திற்குப் பிறகு வெளிப்படும் நல்வாழ்வின் தேவைகள் தம்மிடம் பூர்த்தி பெற்றிருப்பதை அவர் காண்கிறார். நல்வாழ்வின் தேவைகள் என்பது இறைவனின் திருப்தியைப் பெறுவதற்கும் அவனுடைய அதிருப்தியிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கும் தகுதி பெற்றிருப்பதாகும். ஒரு நல்ல ஆன்மா இறை திருப்தியின் தோட்டத்திற்குள் உடனடியாக நுழைவதற்கு போதுமான நற்செயல்களைத் தன்னிடம் கொண்டுள்ளது. உடனடியாக என்ற சொல்லில் அழுத்தம் தரப்படுகிறது. ஒவ்வோர் ஆன்மாவும் விரைவாக அல்லது தாமதமாக அனுமதிக்கப்பட இருக்கிற தோட்டத்திற்குள் முழுமை பெற்ற மனிதன் உடனடியாக நுழைவதற்குத் தயாராக இருக்கிறார். முழுமை பெற்ற மனிதனின் தனிச்சிறப்பு என்னவென்றால், அவர் அதில் முதலில் நுழைபவர்களில் ஒருவராக இருப்பார்.

## பாவம் என்பது என்ன?

நான் இப்போது பாவத்தின் வரையறைக்கு திரும்புகிறேன். பாவம் என்பது மனித ஆன்மாவை நோயுற்றதாகவும், இறைவனின் முகத்தைப் பார்க்க இயலாததாகவும் ஆக்குகின்ற செயல்பாடாகும். ஆன்மா, தனது படைப்பின் நோக்கத்தை நோக்கி மேற்கொள்ளும் பயணத்தில் பல சிரமங்களைச் சந்திக்கிறது. பாவத்திற்கு ஏதுவான செயல்பாடுகள் தனக்கும் மற்றவர்களுக்கும் தெரியும் வண்ணம் பௌதீகமானதாக இருக்கலாம் அல்லது அவை ஆன்மீகமானவையாக இருக்கலாம். பல பௌதீக செயல்பாடுகளால் தோற்றுவிக்கப்படுகின்ற ஆபத்துகளும் குறைபாடுகளும் வெளிப்படையானவையாக உள்ளன.

நற்செயல்கள் என்றால் என்ன? நற்செயல்கள் என்பது ஒரு நபருக்கு மறுமையில் முன்னோக்கிச் செல்வதற்குப் போதுமான பலத்தைத் தருகிறது மற்றும் ஆன்மாவை இறைவனின் முகத்தைப் பார்க்கக் கூடியதாக ஆக்குகிறது. பொதுவாக, ஆரோக்கியமான நபர் என்றால், வாழ்க்கையின் செயல்பாடுகளை இயல்பான வழியில் மேற்கொள்ளும் உடல்திறன் கொண்டவர் என்று பொருள். ஒருவர் கூடுதல் திறன் கொண்டவராக இருக்க வேண்டியதில்லை. ஒருவர் உடல்திறன் பெற்றவராக இருக்க வேண்டும்; அவ்வளவுதான். மற்றபடி சிறு சிறு ஆரோக்கிய குறைபாடுகள் எல்லோரிடமும் இருக்கவே செய்கின்றன. ஒரு முழுமையான ஆரோக்கியமான உடலை மருத்துவர்களால் சுட்டிக் காட்ட முடியாது. இறைவனின் முகத்தைப் பார்க்கும் அளவுக்கு பௌதீகமாகவும் ஆன்மீக ரீதியாகவும் போதுமான நற்செயல்களைச் செய்தவரே ஒரு நல்ல மனிதர் ஆவார்.



## நற்செயல்கள் மற்றும் தீய செயல்களின் வகைகள்

பல்வேறு வகையான நற்செயல்களை விவரிக்காமல், பல்வேறு வகையான பாவங்களைப் பற்றிய போதுமான விளக்கத்தை நம்மால் தர முடியாது. எனவே, மூன்று வகையான நற்செயல்களும் அதற்கேற்ப மூன்று வகையான தீமைகள் அல்லது பாவங்களும் உள்ளன என்பதை நினைவில் கொள்வோம். அவை பின்வருமாறு:

1. உள்ளத்தோடு சம்பந்தப்பட்ட நல்லொழுக்கங்கள் மற்றும் தீமைகள். இவையே உண்மையான நல்லொழுக்கங்கள் அல்லது தீமைகள் ஆகும்.
2. நாவு அல்லது கூற்றுகளின் நற்பண்புகள் மற்றும் தீமைகள்.
3. கைகள், கால்கள், கண்கள் போன்ற பிற உடல் உறுப்புகளை உள்ளடக்கிய நற்பண்புகள் மற்றும் தீமைகள்.

## பாவம் எங்கிருந்து வருகின்றது?

இங்கே ஒரு முக்கியமான கேள்வி எழுகிறது. நல்லொழுக்க வாழ்க்கை வாழ்வதற்கு நன்கு ஊக்கம் தரப்படுகிறது. தீய வாழ்விலிருந்து விலகிக்கொள்ளவும் அழுத்தம் தரப்படுகிறது. மேலும் முன்னேற்றத்திற்கான வழிவகைகளும் உள்ளன. இருப்பினும் பாவம் மனித வாழ்வில் எப்படி இடம் பெற்று விடுகிறது? இதற்கு முக்கியமான பதில்களை மட்டுமே என்னால் சுருக்கமாக குறிப்பிட முடியும்.

பாவத்தின் முக்கிய காரணங்கள் பின்வருமாறு: (1) அறியாமை. சில நேரங்களில் ஒரு நபர் தனது இயற்கையான தூண்டுதல்களைத் திருப்திப்படுத்த முயற்சிக்கும்போது தன்னைப் பற்றி சிந்தித்து செயல்படுவதற்காக நேரத்தை அனுமதிப்பதில்லை. மேலும் கடந்து செல்லும் ஆர்வத்தை அல்லது மகிழ்ச்சியைத் தனது செயலைத் தீர்மானிக்க அனுமதிக்கிறார். கணத்தில் தோன்றும் உற்சாகம் மிகவும் நிரந்தரமான மற்றும் உறுதியான மகிழ்ச்சியான வாழ்க்கை முடிவுகளை அவரது பார்வையில் இருந்து நீக்கி விடுகிறது.



இது ஏன் நடக்க வேண்டும்? வாழ்க்கையின் நிரந்தர முடிவு ஏன் புறக்கணிக்கப்படுகிறது? முதலாவதாக, நிரந்தரமான அல்லது தற்காலிக அறியாமை இதற்கு காரணமாகும். நிரந்தர அறியாமை வேறு ஒரு விஷயம். தற்காலிக அறியாமை என்பது அறிவு இருந்த போதிலும் அறியாமை கொள்வதாகும். இந்த வகையான அறியாமை பல காரணங்களைக் கொண்டிருக்கலாம்:

1. பேராசை. அதிகப்படியான பேராசை ஒரு நபரை பல முக்கியமான விஷயங்களில் குருடாக்குகிறது
2. சிடுசிடுப்பு
3. அதிகப்படியான தேவை உணர்வு
4. மோசமான உடல்நலம்
5. அதிகப்படியான பயம்
6. அதிகப்படியான அன்பு
7. அதிகப்படியான நம்பிக்கை
8. அதிகப்படியான அவநம்பிக்கை
9. எதிலும் அதீத பிடிவாதம்
10. அதிகப்படியான ஆசை
11. அதிகப்படியான ஆசை இல்லாமை
12. பரம்பரை போக்குகள்

அறியாமையை உருவாக்கும் அல்லது ஊக்குவிக்கும் பன்னிரண்டு காரணிகள் அல்லது சூழ்நிலைகள் இவையாகும். அறியாமை மட்டுமின்றி, பாவத்தின் இரண்டாவது பெரிய ஆதாரம், சமூகத் தொடர்புகள் மற்றும் தோழர்கள் ஆவர். மனிதன் பிறவியிலேயே பிறரைப் பின்பற்றும் தன்மை கொண்டவன். தான் செய்யும் செயலின் விளைவுகளை எடை போடாமல், பிறர் செய்வது போல் செய்ய முனைகிறான். இந்த சமூக தாக்கங்களில் பெற்றோர்கள் மற்றும் பிற உறவுகள், விளையாட்டுத் தோழர்கள், ஆசிரியர்கள், சமூக நிறுவனங்கள் மற்றும் பழக்கவழக்கங்களின் செல்வாக்கு அடங்கும். பாவத்தின் ஓர் ஊற்றாக அறியாமையைப் பற்றிக் கூறினோம். ஆனால் அறியாமை என்பது வெறும் அறியாமையாக இருக்கலாம் அல்லது தவறான அறிவாக இருக்கலாம், இது சுத்த அறியாமையிலிருந்து வேறுபடுகிறது. தவறான அறிவு சில சமயங்களில் அறிவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. போலியான பொதுக்கருத்துக்கள் சில சமயங்களில் உண்மையான கொள்கைகளாகக் கருதப்படுகின்றன.

பாவத்தின் மற்றொரு ஊற்று கெட்ட பழக்கங்கள் ஆகும். உண்மை என்னவென்பதையும், உண்மையை பேசுவதன் முக்கியத்துவத்தைக் குறித்தும் நன்கு அறிந்திருப்பார், முக்கியமான தருணம் வரும்போது, அந்த நபர் உண்மையைக் கூறாமல் இருப்பார். இதைப் போன்று போதைக்கு அடிமையான ஒருவர் இனிமேல் மது அருந்தக் கூடாது என்று தீர்மானித்துக் கொள்கிறார். மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள், மது அருந்தாமையின் நன்மைகள் எல்லாம் அவருக்குத் தெரியும். ஆனால் மக்கள் உட்கார்ந்து மது அருந்த ஆரம்பிக்கும் போது அவர் தன்னை அதில் சேர்ந்து கொள்ள அனுமதிக்கிறார். அந்த சோதனையை அவரால் எதிர்க்க முடிவதில்லை. ஒரு சிறிய அழைப்பில், இனி குடிக்கப் போவதில்லை என்ற அவரது தீர்மானம் உடைந்து விடுகிறது.



சோம்பேறித்தனம் மற்றும் அன்றாட வாழ்வில் முறையாக நேரத்தைப் பயன்படுத்தாமை போன்ற -வற்றாலும் பாவம் ஏற்படுகிறது. ஒரு நபர் விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்கிறார். அவர் கவனமற்ற தன்மை உடையவராவார். அவருக்கு வேலை செய்வதில் நாட்டம் இல்லை. நேரம் வரும்போது, அவர் என்ன செய்ய வேண்டுமோ அதனை எளிதாக எடுத்துக் கொள்கிறார். நேரம் கடந்து விடும்போது, திடீரென்று தான் குடித்துக் கொண்டிருப்பதைக் காண்கிறார். ஒருமுறை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பற்றுமிக்க சஹாபி ஒருவர் போர்க்களத்திற்குச் செல்லத் தயாராக இருந்தார். ஆனால் அவர் அதற்கு எந்த ஆயத்தமும் செய்யவில்லை. நேரம் வரும்போது எளிதாக படையுடன் சேர்ந்து கொள்ளலாம் என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டார். அவர் தனது தயாரிப்புகளை இறுதி வரை விட்டு விட்டார். இதன் விளைவாக அவர் படையுடன் சேர முடியாமல் பின்தங்கினார். எனவே, சோம்பேறித்தனம் பெரும்பாலும் பாவத்திற்குக் காரணமாகிறது. மனிதன் சோம்பேறி -யாகவும், சுலபமாக நடந்து கொள்பவனாகவும், தன்னை எழுந்து செல்லக் கட்டளையிட இயலாதவனாகவும் இருக்கிறான்.

பாவம் செய்வதற்கான மற்றொரு காரணம் ஒப்பிட்டு தீர்ப்பளிக்கும் தகுதி இல்லாததாகும். இரண்டு மாற்று நடவடிக்கைகளில், இரண்டில் எது சிறந்தது என்பதை ஒருவரால் தீர்மானிக்க முடிவதில்லை. இத்தகையவர் -களுக்கு இரண்டு தரப்பினரால் உருவாக்கப்படுகின்ற இரண்டு வெவ்வேறு சூழ்நிலைகளுக்கு வெவ்வேறு உணர்வுகளை எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்பது ஒரு கேள்வியாகிறது. ஒரு தரப்புடன் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும்; மற்றொன்றுடன் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும் என்பது தெரிவதில்லை. ஒருமனிதன் தன் மனைவியை நேசிக்கிறான். ஆனால் தன் தாயையும் நேசிக்கிறான். இருவரும் நேசத்திற்கு ஒரே மாதிரியான உரிமையை வைத்துள்ளனர். இது பெரும்பாலும் சுயமாக உருவாக்கப்பட்ட கடினமான சூழ்நிலைகளுக்கு வழி வகுக்கிறது. இதேபோல் பலர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மையை நம்புகிறார்கள். ஆனால் ஜமாஅத்தில் சேரத் தயங்குகிறார்கள். தாங்கள் விட்டுவிட விரும்பாத மற்றொரு மகானிடம் பைஅத் செய்திருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். இந்த சிரமங்கள் தீர்ப்பளிக்கும் தகுதி இல்லாததன் காரணமாக ஏற்படுகின்றன

பாவத்தின் மற்றொரு ஊற்று, நம் வாழ்வில் ஒருவர் மீது மற்றவரால் ஏற்படும் கண்ணுக்குத் தெரியாத பல தாக்கங்கள் ஆகும். அவர்கள் ஒருவகையான ஹிப்னாடிக் தாக்கத்தைச் செலுத்துகிறார்கள், பாதிக்கப்பட்ட நபருக்குத் தெரியாது. எந்த வாதமும் வைக்கப்பட -வில்லை, எந்த முறையீடும் செய்யப்படவில்லை, ஆனால் கருத்துக்கள் தாக்கங்களை உருவாக்குகின்றன. இத்தகைய தாக்கங்கள் இருப்பதை மறுக்க முடியாது. இதற்கு சில விளக்கம் தேவை. ஒழுக்கமான ஒரு நபர் எந்தவொரு வெளிப்படையான தொடர்பும் இல்லாமல் தீய சிந்தனையை வளர்க்கும் ஒன்பது பேருடன் நெருக்கமாக வாழட்டும். அவர் விரைவில் தீய தாக்கத்தை உணரத் தொடங்குவார்.

(தொடரும்...)

நற்செயல்கள் என்பது ஒரு நபருக்கு மறுமையில் முன்னோக்கிச் செல்வதற்குப் போதுமான பலத்தைத் தருகிறது மற்றும் ஆன்மாவை இறைவனின் முகத்தைப் பார்க்கக்கூடியதாக ஆக்குகிறது. பொதுவாக, ஆரோக்கியமான நபர் என்றால், வாழ்க்கை –யின் செயல்பாடுகளை இயல்பான வழியில் மேற்கொள்ளும் உடல்திறன் கொண்டவர் என்று பொருள். ஒருவர் கூடுதல் திறன் கொண்டவராக இருக்க வேண்டியதில்லை. ஒருவர் உடல்திறன் பெற்றவராக இருக்க வேண்டும்; அவ்வளவுதான். மற்றபடி சிறு சிறு ஆரோக்கிய குறைபாடுகள் எல்லோரிடமும் இருக்கவே செய்கின்றன. ஒரு முழுமையான ஆரோக்கியமான உடலை மருத்துவர்களால் சுட்டிக் காட்ட முடியாது. இறைவனின் முகத்தைப் பார்க்கும் அளவுக்கு பௌதீக –மாகவும் ஆன்மீக ரீதியாகவும் போதுமான நற்செயல்களைச் செய்பவரே ஒரு நல்ல மனிதர் ஆவார்.



# பொருள் தியாகமும் நமது பொறுப்புகளும்

A. அப்துல் நிஸார்

முழு உலகிலும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் பொருள் தியாகம் ஈடிணையற்ற ஒன்றாகும். இதுபோன்ற நிரந்தரமாக நிலைத்து நிற்கும் பைத்துல் மால் அமைப்பு உலகில் வேறு எங்கும் இல்லை.

அஹ்மதிகளாகிய நாம் அருளுக்குரியவர்கள்! நம்மிடம் பைத்துல் மால் அமைப்பு உயிருடன் உள்ளது. முழு உலகிலும் இதன் சேவை எண்ணிலடங்காதவை! இந்த சேவையில் நமது பங்களிப்பு என்னவென்பதை நம் ஒவ்வொருவரும் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். நமது சிந்தனையை மெருகூட்ட இது பற்றி இங்கு சுருக்கமாக எடுத்துரைக்க முயற்சி செய்வேன் – இன்ஷா அல்லாஹ்.

அல்லாஹ் திருக்குர்ஆன் அதிகாரம் அல் பகரா வசனம் 246 –ல் கூறுகின்றான்:

مَنْ ذَا الَّذِىْ يُقْرِضُ اللّٰهَ قَرْضًا حَسَنًا فَيُضٰعِفَهٗ لَهٗۤ اَضْعَافًا كَثِيْرَةً ؕ

அல்லாஹ்விற்கு, தனது செல்வத்திலிருந்து ஒரு நல்ல பகுதியை பிரித்துக் கொடுப்பவர் எவர்? அதன் காரணமாக, அவன் அதனை அவருக்குப் பெருமளவில் பன்மடங்காகப் பெருக்குவான் (என்பதும் அல்லாஹ்வின் நடைமுறையாகும்).

இந்த வசனத்தில் அல்லாஹ், நாம் வழங்கும் செல்வத்தின் ஒரு பகுதியை அவன் நமக்கு எப்போது திருப்பித் தருவான் என்ற எந்தக் குறிப்பையும் கூறவில்லை. பெருமளவில் பன்மடங்காகப் பெருக்குவேன் என்று மட்டுமே கூறுகிறான். எப்போது பெருக்கித் தருவான் என்ற கேள்வி இங்கு எழுகிறது?



இதற்கு விடையாக ஹதீஸே குத்ஸி ஒன்றில் நாம் பார்க்கிறோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அல்லாஹ் தொடர்பாக இவ்வாறு கூறினார்கள்:

ஆதமின் சந்ததிகளே! நீங்கள் உங்களது கருவூலத்தை என்னிடத்தில் சேர்த்து வைத்து நிம்மதி அடைந்து கொள்ளுங்கள். அதற்கு நெருப்பு பற்றுவதற்கான அபாயமும் இல்லை; நீரில் மூழ்குவதற்கான வாய்ப்பும் இல்லை. மேலும் எந்தத் திருடனும் திருடுவதற்கான பயமும் இல்லை. என்னிடம் வைக்கப்பட்டுள்ள செல்வங்களை நீங்கள் அதற்கு மிக அதிக தேவையுள்ளவர்களாக இருக்கும்போது வழங்குவேன் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

(கன்ஸுல் உம்மால் தொகுதி 6 பக்கம் 352 ஹதீஸ் எண் 16021)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பொருள் தியாகத்தின் தேவை குறித்து இவ்வாறு கூறுகின்றார்கள்: “நமது பார்வையில் இன்று மிகப்பெரும் தேவையாக இருப்பது இஸ்லாத்தின் வாழ்வாகும். இஸ்லாம் எல்லா வகையான தொண்டிற்கும் தேவையுடையதாக இருக்கின்றது. அதன் தேவையை விட வேறு எந்தத் தேவைக்கும் நாம் முன்னுரிமை வழங்க முடியாது. இன்று மிகப்பெரும் தேவை நம்மால் இயன்ற வரை இஸ்லாத்திற்குத் தொண்டு செய்வதாகும். எந்த அளவு ரூபாய்கள் இருக்கின்றனவோ அவற்றை இஸ்லாத்தை உயிர்ப்பிப்பதற்காகச் செலவு செய்ய வேண்டும்.”

(மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 327)

ஒருமுறை பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “எந்தப் பொருளை இறைவழியில் செலவு செய்து முன்னே அனுப்பி வைத்து விட்டீர்களோ அதுவே உங்களது அசல் பொருளாகும். எது பின்னால் எஞ்சியிருக்கின்றதோ அது வாரிசுகளின் பொருளாகும்.” (முஸ்லிம் கிதாபுஸ் ஸக்காதி பாபு பயானி அன் அஃப்ஸலுல் ஸதகதி அஸீஹுஸ்ஸேகி ஹதீஸ் எண் 2383)

இந்த உலகில் நாம் செய்யும் செலவீனங்கள் அனைத்தும் நமக்கானதல்ல. நமக்கானது என்பது இறைவழியில் செலவு செய்து முன்னே அனுப்புவதுதான் என்பதை இந்த நபிமொழி நமக்கு உணர்த்துகிறது.

ஒரு சம்பவம் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் மியான் ஷாதி கான் சாஹிப் அவர்கள் வறியவராக இருந்தார்கள். ஆனால், உள்ளத்தால் அரசராகத் திகழ்ந்தார்கள். அந்த அர்ப்பணிப்பு மனப்பான்மை உள்ள மனிதரின் முன்மாதிரி இவ்வாறு இருந்தது: அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் 150 ரூபாய் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு தனது வீட்டில் இருந்த அனைத்துப் பொருள்களையும் விற்று மேலும் 200 ரூபாய் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கொடுத்தார்கள். அந்தக் காலத்தின் அடிப்படையில் பார்க்கும் போது இது மிகப்பெரும் தியாகமாக இருந்தது.

ஒரு சபையில், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்தத் தியாகம் தொடர்பாக தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தவாறு இவ்வாறு கூறினார்கள்: மியான் ஷாதி கான் அவர்கள் தன்னிடமிருந்த எல்லாவற்றையும் வழங்கி விட்டார்கள். உண்மையில் அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் செய்த அதே தியாகத்தைச் செய்துள்ளார்கள்.

மியான் ஷாதி கான் அவர்கள் இந்த சொற்களைக் கேட்டு விட்டு நேரடியாக தன் வீட்டிற்குச் சென்றார்கள். வீட்டின் எல்லா பக்கமும் பார்த்தார்கள். முழு வீடும் காலியாக இருந்தது. சில கட்டில்கள் மட்டும் எஞ்சி இருந்தன. உடனடியாக அவற்றையும் அவர்கள் விற்று விட்டார்கள். கிடைத்த முழு தொகையையும் கொண்டு வந்து ஹுஸூர் (அலை) அவர்களிடம் கொடுத்தார்கள். மேலும், ஹுஸூர் (அலை) அவர்களது நாவிலிருந்து வெளி வந்த வார்த்தைகளை சொல்லுக்குச் சொல் அவர்கள் நிறைவேற்றி விட்டார்கள்.

பிறகு, அல்லாஹ் இறை வழியில் அனைத்தையும் அர்ப்பணித்த இந்த தொண்டருக்கு எவ்வாறு வழங்கினான் என்று பாருங்கள். அவர்கள் வஃபாத் ஆனபோது அவர்கள் இறுதியில் ஓய்வெடுக்க வேண்டிய இடம் பெஹஷ்தி மக்பராவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது மண்ணறைக்கு சில கஜங்கள் தொலைவிலேயே அமைந்தது. பிறகு, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் அன்னாரது குடும்பத்தைச் சார்ந்தவர்களும் அடக்கம் செய்யப்பட்ட அந்த எல்லைக்குள்ளேயே அன்னாரது கபரும் வந்து விட்டது.

(மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 3 பக்கம் 315).



ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒவ்வொரு நாள் காலையிலும் இரண்டு மலக்குகள் இறங்குகிறார்கள். அவர்களில் ஒருவர், அல்லாஹ்வே! தியாகம் செய்யக்கூடிய கொடையாளிக்கு மேலும் வழங்குவாயாக. மேலும் அவரது அடிச்சுவட்டில் செல்லக்கூடிய மக்களை உருவாக்குவாயாக என்று கூறுவார். மற்றொருவர், அல்லாஹ்வே! தியாகத்திலிருந்து தவிர்ந்திருக்கக்கூடிய கருமியை அழித்து விடுவாயாக. அவரது செல்வத்தை வீணாக்கி விடுவாயாக என்று கூறுவார். (புகாரி கிதாபுஸ் ஸக்காத்)

பொருள் தியாகம் தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நமது ஜமாஅத் இறைவனால் உருவாக்கப்பட்ட ஜமாஅத் ஆகும். இறைவனால் உருவாக்கப்பட்ட ஜமாஅத் கஷ்டங்கள் இன்றி முன்னேற்றம் அடையாது. ஆக, இந்த விஷயத்தை எடுத்துரையுங்கள்; எடுத்துரைத்துக் கொண்டே செல்லுங்கள். எந்த அளவுக்கு என்றால், இது நிரந்தரமாகப் பின்பற்றத்தக்கதாக இருக்க வேண்டும். ஒரு சிறுவனிடம் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றத்திற்கான வழி என்னவென்று கேட்டால், அவன் உடனடியாக, நாம் பொருள் மற்றும் உயிரைக் (தியாகம்) கொடுக்காமல் முன்னேற்றம் அடைய முடியாது என்று கூற வேண்டும்; நான் அதற்குத் தயாராக உள்ளேன் என்று பதில் கூற வேண்டும். ஆக, ஒவ்வொருவரின் மூளையிலும் இந்த விஷயம் இடப்பட வேண்டும். மேலும் இதன்கீழ் ஜமாஅத்தில் எப்படிப்பட்ட சூழலை உருவாக்க வேண்டும் என்றால் தியாகம் செய்வது ஒரு கடினமானதாக இருக்கக் கூடாது.

(குத்பாத்தே ஷூரா தொகுதி 2 பக்கம் 330)

தற்போதைய நமது பொறுப்பு என்னவென்றால், அல்லாஹ் நமக்கு வழங்கிய செல்வத்தின் ஒரு பகுதியை நாம் இந்த பைத்துல் மால் அமைப்புடன் இணைக்க வேண்டும். எவ்வாறெனில், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், ஒருவர் ஒரு ரூபாய் இந்த இயக்கத்திற்காக கொடுக்க விரும்பினாலும் அதை அவர் மாதாமாதம் கொடுக்கட்டும் என்று நமக்கு அறிவுறுத்தி யுள்ளார்கள்.

எனவே, புதிய நிதியாண்டு தொடங்கும்போது நமது சரியான வருமானத்தை கணக்கிட்டுப் பார்த்தவாறு செகரட்டரி மால் இடம் தமது மாத வருமானத்தைத் தெரியப்படுத்த வேண்டும். பிறகு, விகிதாச்சார அடிப்படையில் அதாவது, வஸிய்யத் செய்தவர் என்றால் வருமானத்திலிருந்து 10 சதவீதமும், வஸிய்யத் செய்யாதவர் என்றால் வருமானத்திலிருந்து 6.25 சதவீதமும் கணக்கிட்டவாறு தங்களது சந்தாவினை முறையாக மாதாமாதம் நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும்.

வருவாய் என்பதன் இலக்கணம்: எல்லா விதமான மூலதனம் – அது நிலம், வீடு, இயந்திரம், ரூபாய், சொந்த திறமை ஆகிய எதுவாக இருந்தாலும் – அதிலிருந்து கிடைக்கும் வருவாய்க்கும் சந்தா கொடுப்பது கட்டாயமாகும். அவ்வாறே பரிசு, உதவித் தொகை, வாழ்வைக் கழிப்பதற்காக கிடைக்கும் பணம், பென்ஷனிலிருந்து Commute செய்யப்பட்ட தொகை, Gratuity, Provident Fund, தாம் செலவு செய்வதற்கு பிள்ளைகள், உறவினர்களிடமிருந்து கிடைக்கும் முழு அதிகாரம் பெற்ற பணம் ஆகியவற்றின் மீதும் சந்தா கட்டாயமானதாகும்.

இங்கு ஒரு விஷயத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன். பிள்ளைகள் அல்லது உறவினர்களின் வருமானத்தில் வாழ்வைக் கழிக்கும் சிலர், எனக்கு எந்த வருமானமும் இல்லை; ஒரு தொகையை பட்ஜெட்டில் எழுதிக் கொள்ளலாம் என்று கருதுகின்றனர். அது தவறாகும். தமது வாழ்க்கைத் தேவைக்காக என்ன பணம் கிடைக்கின்றதோ அந்தத் தொகையை பட்ஜெட்டில் எழுத வேண்டும் என்பதே சரியானதாக இருக்க முடியும். எந்தப் பணம் கிடைத்தாலும், அது உழைப்பினால் கிடைத்தாலும், அல்லது அன்பளிப்பாக கிடைத்தாலும் அதனை அல்லாஹ்வே வழங்குகின்றான் என்பதை நாம் அறிவோம். அதற்கு சரியான விகிதாச்சாரப்படி சந்தா கொடுப்பதே சிறந்ததாக இருக்கும். பிள்ளைகளோ, உறவினர்களோ அவர்கள் சம்பாதிப்பதற்கு

சந்தா கொடுக்கத்தானே செய்கின்றனர் என்ற எண்ணம் சிலருக்கு தோன்றுகிறது. இருப்பினும், உங்களின் வாழ்வாதாரத் தேவைக்காக கிடைக்கும் தொகையிலிருந்து நீங்கள் சரியான விகிதாச்சாரப்படி சந்தா கொடுப்பதே சரியாக இருக்க முடியும்.

மேலும் வஸிய்யத் செய்தவர்கள் என்றால், தங்களது பெயரில் உள்ள குடியிருக்கும் வீடு மற்றும் நிலம் ஆகியவற்றிற்கு அதன் மதிப்பில் 10 சதவீதம் 'ஹிஸ்ஸா ஜாயிதாத்' சந்தா கொடுக்க வேண்டும். இதனை தலைமையகம் நியமிக்கும் கால அவகாசத்திற்குள் கொடுக்க முயற்சி செய்ய வேண்டும்.

பிறகு ஸக்காத் தொடர்பாக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்: ஸக்காத்தின் முக்கியத்துவம் மற்றும் கடமை பற்றி எவரும் மறுப்பதில்லை. எனவே, எவர்கள் மீது ஸக்காத் கடமையோ அவர்களுக்கு நான் ஸக்காத் கொடுப்பது அவசியமானது என்று கவனமூட்டுகிறேன். அவர்கள் கண்டிப்பாக கொடுக்க வேண்டும். குறிப்பாக நகை வாங்கி வைக்கும் பெண்களின் மீது ஸக்காத் கடமையாகும். தங்கத்தின் மீது ஸக்காத் கடமையாகும்.

நகைகளின் ஸக்காத் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எந்த நகை அணியப்படுகிறதோ, எப்போதாவது ஏழைப் பெண்களுக்கு வழங்கப்படுகிறதோ அதற்கு எந்த ஸக்காத்தும் இல்லை என்பது சிலருடைய மார்க்கத் தீர்ப்பாகும். எந்த நகை அணியப்படுகிறதோ, மற்றவர்களுக்குப் பயன்படுவதற்காகக் கொடுக்கப்படுவ –தில்லையோ அதற்கு ஸக்காத் கொடுப்பது சிறந்ததாகும். ஏனெனில் அது தமக்காகப் பயன்படுகிறது. இதன்படியே எங்கள் வீட்டில் செயல்படுகிறோம். ஒவ்வோர் ஆண்டிற்குப் பிறகு, இருக்கின்ற நகைகளுக்கு நாங்கள் ஸக்காத் கொடுக்கின்றோம். எந்த நகை பணத்தைப் போன்று சேமித்து வைக்கப்படுகின்றதோ அதற்கு ஸக்காத் உண்டு என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. (அல் ஹகம் 17.11.1905 பக்கம் 11)

எவரிடம் 52.5 தோலா (612 கிராம்) வெள்ளி இருக்கிறதோ அது ஓராண்டு வரை அவரிடம் இருந்தால், அதற்கு 1/40 அதாவது 2.5 சதவீதம் ஸகாத் கொடுப்பது கடமையாகும். அவ்வாறே எவரிடம் 7.5 தோலா (87 கிராம்) தங்கம் இருக்கிறதோ அல்லது அதற்கு நிகரான ரொக்கப் பணம் இருக்கிறதோ அது ஓராண்டு வரை அவரிடம் இருந்தால், அதற்கும் அவர் 1/40 அதாவது 2.5 சதவீதம் ஸகாத் கொடுப்பது கடமையாகும்.

எனவே, நமது வங்கிக் கணக்கில் ஓராண்டு காலம் வரை பயன்படுத்தாமல் இருக்கும் பணத்திற்கு 2.5 சதவீதம் ஸக்காத் ஒவ்வோர் ஆண்டும் வழங்க முயற்சி செய்ய வேண்டும். பெண்கள், தம்மிடம் பயன்படுத்தாமல் இருக்கும் நகைகளுக்கு அதன் தற்போதைய மதிப்பின் அடிப்படையில் 2.5 சதவீதம் ஒவ்வோர் ஆண்டும் ஸக்காத் வழங்க முயற்சி செய்ய வேண்டும்.

மேலும், கிளை அமைப்புகளின் சந்தாக்களான, அன்ஸாருல்லாஹ் சந்தா, குத்தாம் சந்தா, லஜ்னா சந்தா மற்றும் உள்ளூர் செலவீனங்களுக்கான சந்தா போன்ற சந்தாக்கள் உள்ளன. இதனையும் விகிதாச்சார அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் முறையாக கொடுக்க முயற்சி செய்ய வேண்டும்.

இது மட்டுமின்றி விருப்பச் சந்தாக்களான தஹ்ரீகே ஜதீது மற்றும் வக்ஃபே ஜதீது சந்தாக்கள் உள்ளன. இந்தத் திட்டத்தில் கருவில் உள்ள குழந்தை, பிறந்த குழந்தை மற்றும் ஜமாஅத்திலுள்ள ஒவ்வொரு நபரும் இணைய வேண்டும் என்று கிலாஃபத் நமக்கு கட்டளையிடுகிறது. இதனை நிதியாண்டு தொடங்கும்போது வாக்குறுதி கொடுத்து, பிறகு அதனை குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். நிதியாண்டு ஆரம்பத்திலேயே வாக்குறுதித் தொகையை முழுமையாக நிறைவேற்றும் முன்மாதிரியும் நம்மிடம் உள்ளது.

பிறகு இஜ்திமாக்களுக்கான சந்தாக்கள், ஜமாஅத்தின் வெளியீடுகள் சார்பான சந்தாக்கள் இன்னும் பிற சந்தாக்கள் உள்ளன. இவற்றிலும் நாம் முடிந்த அளவு நமது பங்களிப்பை வழங்க முயற்சி செய்ய வேண்டும்.




இவ்வாறு நாம் ஜமாஅத்தின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப மேற்குறிப்பிட்ட வரிசையில் முன்னுரிமை வழங்கி சந்தாவினை முறையாக நிறைவேற்றும் பட்சத்தில், 'நீங்கள் அதற்கு மிக அதிக தேவையுடையவர்களாக இருக்கும்போது வழங்குவேன்' என்ற அல்லாஹ்வின் வாக்குறுதி நம் மீதும் நிறைவேறும் – இன்ஷா அல்லாஹ்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் அஹ்மதிகளின் தன்னலமற்ற தியாகங்கள் தொடர்பாக இவ்வாறு கூறினார்கள்:

உருவத்தின் இன்னொரு சரியான பக்கமும் இருக்கின்றது. அது அஹ்மதிகளின் பொருள் தியாகங்கள் ஆகும். அல்லாஹ்வின் கட்டளைகளின்படி நடந்தவாறு எப்போது தியாகம் செய்கின்றார் –களோ அது அல்லாஹ்வின் அருள் என்று கருதி தியாகம் செய்யக்கூடிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களின் பொருள் தியாகங்கள் தொடர்பானதாகும். அவர்கள் எந்தவொரு தனி மனிதரின் மீதோ ஜமாஅத்தின் மீதோ பேரருள் செய்யும் விதத்தில் தியாகம் செய்வதில்லை. மேலும் எவருக்கும் கஷ்டம் கொடுக்கும்

எண்ணத்திலும் தியாகம் செய்வதில்லை. எண்ணம் இருக்கிற –தென்றால் அது அல்லாஹ்வின் தூதுச் செய்தி உலகில் பரப்புவதற்காக நம்முடைய பங்களிப்பும் இருக்க வேண்டும் என்பதாகும். கவலைக்கு உள்ளாகியிருக்கும் மனித குல தொண்டிற்கு நாமும் எதையாவது கொடுக்க வேண்டும்; இறைவனுடைய விருப்பத்தைப் பெற வேண்டும் என்பதாகும். **இவர்களில், தங்களின் வயிற்றைக் கட்டிக் கொண்டு பொருள் தியாகம் செய்பவர்களும் அடங்குவர். இவர்களில், மாபெரும் பொருள் தியாகம் செய்பவர்களும் அடங்குவர். தங்களது சந்தாக்களைத் தவிர்த்தும் கோடிக்கணக்கான ரூபாயையும் அவர்கள் தியாகம் செய்து விடுகின்றனர். அந்த தியாகம் யாருக்கும் தெரியக் கூடாது என்றும் அவர்கள் முயற்சி செய்கின்றனர்.**

**ஆக, இவர்களே அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்ப தன்னுடைய இறைவனிடம் அந்தத் தியாகங்களுக்கான நற்கூலியைப் பெறும் மக்களாவர்.** அவர்களை அந்தத் தியாகத்தின் காரணமாக அல்லாஹ் இவ்வுலகிலும் தன்னுடைய அருளின் போர்வையில் எடுத்துக் கொள்வான். அவர்களின் குழந்தைகளை அவர்களின் கண்களுக்கு குளிர்ச்சியளிக்கக் கூடியவர்களாக ஆக்குகின்றான். மறுவுலக வாழ்க்கையில் இறைவன் அவர்களுக்கு வழங்க இருக்கின்ற அருள்களுக்கு எந்தக் கணக்கும் கிடையாது. இவர்கள் ஏன் இந்தத் தியாகங்கள் செய்கின்றார்கள் என்றால் இவர்களுக்கு இறைவனின் வாக்குறுதியின் மீது நம்பிக்கை இருக்கிறது.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறுகின்றார்கள்: அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பொருள் தியாகம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைத்துவத்திற்கு ஒரு மாபெரும் அடையாளமாகும். அதாவது முழு உலகமும் அழுத்தம் கொடுத்தும், ஏசிப் பேசியும், முயற்சி செய்தும், திட்டங்கள் தீட்டியும் கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தின் இந்த மாபெரும் மற்றும் தனிச்சிறப்பை அவர்களிடமிருந்து பிடுங்க இயலாது. முழு உலக சக்திகளுக்கும் நான் கூறுகின்றேன். நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்து பாருங்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தைப் போன்று பொருள் தியாகம் செய்யக்கூடிய ஜமாஅத்தைக் கொண்டு வந்து காட்டுங்கள். அவர்கள் இதுபோன்று தூய்மையுடனும், விசுவாசத்துடனும், தியாக உணர்வுடனும் இறைவனுக்கு தன்னுடைய செல்வங் –களைக் கொடுக்கின்ற முகத்தை உலகின் முன்பு காட்டுங்கள். (ஜுமுஆ குத்பா 25 டிசம்பர் 1992)

பொருள் தியாகத்தின் உண்மையான ஆன்மாவைப் புரிந்த இத்தகைய மக்களுடன் இணையும் நற்பேற்றினை அல்லாஹ் நம் அனைவருக்கும் வழங்குவானாக. ஆமீன்!

# அஹ்மதிய்யத் என்றால் என்ன?



ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: பதின்மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலம் உலகிற்கு வழங்கப்பட்டதும், திருக்குர்ஆனின் கட்டளைகளின் வழி நிர்மாணிக்கப்பட்டதுமான இஸ்லாமே அஹ்மதிய்யத் ஆகும். கடந்து சென்ற நூற்றாண்டுகளில் பல புதுமைகளும், இடைச்செருகல்களும் இஸ்லாத்தில் நுழைந்து விட்டன. மறுபுறம், அதன் பல அம்சங்கள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டு விட்டன. இதன் விளைவாக அவை கண்டு கொள்ளப்படாமல் இருக்கின்றன. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இத்தகைய இடைச்செருகல்கள் அனைத்தையும் அகற்றினார்கள். மக்கள் தங்கள் இறையச்சமின்மையின் காரணமாகப் பெற முடியாமல் இருந்த திருக்குர்ஆனின் வசனங்களில் மறைந்து கிடந்த ஆன்மீக உண்மைகளின் செல்வத்தைக் கண்டுபிடித்து வெளியிட்டார்கள். வேறொரு வார்த்தையில் சொல்வதென்றால், மறக்கப்பட்டுத் தன் உண்மை வடிவத்தை இழந்து நின்ற நிலையில் இறை வழிகாட்டலுக்கிணங்க வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உலகிற்கு வழங்கிய உண்மை இஸ்லாமே அஹ்மதிய்யத் ஆகும்.

[நூல்: 'அஹ்மதிய்யா இயக்கம்' பக்கம் 15,16]

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M. Muhammad Sultan Muhiyudeen | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam